


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 216 19.03.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 216 | Thursday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(19–03–2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி–5

பிறை: தேய்பிறை

திதி
அமாவாசை காலை 7.29 வரை பிறகு பிரதமை மறுநாள் காலை 4.59 வரை பிறகு துவிதியை.

நட்சத்திரம்:
உத்தரட்டாதி மறுநாள் விடியற்காலை 5.11 வரை பிறகு ரேவதி.

யோகம்
சித்தயோகம்

ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி.

எமகண்டம்
காலை 6.00–7.30 மணி.

சூலம் – தெற்கு.

நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி

| | |
|---|---|
| மேஷம் | நன்மை |
| ரிஷபம் | மேன்மை |
| மிதுனம் | நேர்மை |
| கடகம் | லாபம் |
| சிம்மம் | களிப்பு |
| கன்னி | சுகம் |
| துலாம் | சுபம் |
| விருச்சிகம் | திடம் |
| தனுசு | சிறப்பு |
| மகரம் | மகிழ்ச்சி |
| கும்பம் | பொறுமை |
| மீனம் | பொறுப்பு |

# நான்கு முனை போட்டிக்கு தயாராகும் தமிழகம்

## 234 தொகுதிகளிலும் தனித்து களமிறங்கும் தவெக?

**சென்னை, மார்ச் 19:**

விஜய்யின் தமிழக வெற்றி கழகம் 234 தொகுதிகளிலும் தனித்து களம் காணப்போவதாக வெளியாகியுள்ள தகவல், தமிழக அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம், திராவிடக் கட்சிகளின் பலப்பரிட்சைக்கு மத்தியில் 'நான்கு முனைப் போட்டி' உறுதியாகியுள்ளது.

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளுங்கட்சியான திமுக தலைமையில் காங்கிரஸ், இடதுசாரிகள், விசிக, மதிமுக மற்றும் புதிதாக இணைந்துள்ள தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் இருக்கின்றன. கடந்த கால கசப்புகளை மறந்து மீண்டும் இணைந்துள்ள அதிமுக, பாஜக மற்றும் பாமக உள்ளிட்ட கட்சிகள் கைகோர்த்திருக்கின்றன. வழக்கம் போல் தேர்தலில் தனித்து நிற்பது என்ற ஒற்றை இலக்குடன் சீமான் களம் காண்கிறார். இந்த சூழலில் தவெகவின் 'தனித்து போட்டி' என்ற முடிவு, தமிழக அரசியலில் நான்குமுனை போட்டியை உருவாக்கியுள்ளது.

இதற்கிடையில் கடந்த சில நாட்களாக பாஜக மேலிடம், குறிப்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, விஜய்யை தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குள் கொண்டு வரத் தீவிர முயற்சி எடுத்ததாகத் தகவல்கள் வெளியாகின. தமிழகத்தில் திமுக-வை வீழ்த்த விஜய்யின் வாக்கு வங்கி அவசியம் என பாஜக கருதியது. இதற்காக ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் மூலமாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கூட்டணிக்குத் தூது வந்தவர்களிடம் விஜய் தரப்பில் வைக்கப்பட்ட நிபந்தனைகள் அரசியல் வட்டாரத்தை அதிர வைத்தன. "90 தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும்; இரண்டரை ஆண்டுகள் முதல்வர் பதவி வழங்கப்பட வேண்டும்" என்ற நிபந்தனைகளை விஜய் தரப்பு முன்வைத்ததாகக் கூறப்படுகிறது. இதனை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஏற்க மறுத்ததால், கூட்டணிப் பேச்சுவார்த்தை முட்டுக்கட்டையில் முடிந்ததாகத் தெரிகிறது.

இதை மையமாக வைத்து கட்சிக்குள் பொதுச் செயலாளர்களான புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனாவுக்கு இடையே அதிகாரப் போட்டி நிலவி வந்ததாகச் செய்திகள் கசிந்தன. சமீபத்தில் கட்சி நிர்வாகிகளுடன் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், "என்ன நடந்தாலும் வரும் தேர்தலில் நாம் தனித்து தான் போட்டியிடுகிறோம்" எனத் தெள்ளத்தெளிவாகக் கூறிய விஜய், மோதலில் இருந்த நிர்வாகிகளைச் சமாதானப்படுத்தி தேர்தல் பணிகளை வேகப்படுத்த உத்தரவிட்டுள்ளார். இருப்பினும் தொடர்ச்சியாக பாஜக தரப்பில் கூட்டணிக்கான முயற்சி நடந்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் பரபரப்பான சூழல் ஏற்பட்டிருக்கிறது.



## சென்னையில் விதிமீறல்களை கண்காணிக்க 24 மணிநேர தேர்தல் கட்டுப்பாட்டு அறை திறப்பு



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் கீழ் இயங்கும் தேர்தல் ஊடக கண்காணிப்பு மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறை, மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மையத்தில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் 24 மணி நேரமும் தீவிரமாக கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, ஊடகக் கண்காணிப்பு மையத்தில் உள்ள தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்படும் செய்திகள் மற்றும் நிகழ்ச்சிகள் கூர்ந்து கவனிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் மீறப்படுகிறதா என்பது பதிவு செய்யப்படும்.

அதேபோல், சென்னை மாவட்டத்துக்குட்பட்ட 16 சட்டப்பேரவை தொகுதிகளிலும் கள மிறக்கப்பட்டுள்ள தேர்தல் பணிகளுக்காக பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்பு குழுக்கள் மற்றும் வீடியோ கண்காணிப்பு குழுக்கள் பணியில் ஈடுபட்டு, தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்வதை மாவட்ட கட்டுப்பாட்டு அறை வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

இதையொட்டி, பொதுமக்கள் மற்றும் வாக்காளர்கள் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க 18004257012 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் 'சிவிஜில்' செயலி மூலம் வரப்பெறும் புகார்களும் இந்த மையத்தின் வாயிலாகத் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட தேர்தல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ஈரானின் 2-வது மிகப் பெரிய தலைவர் அலி லாரிஜானி, மூத்த தளபதி சுலைமானி உயிரிழப்பு: இஸ்ரேல் பிரதமர் தகவல்

**டெல் அவிவ், மார்ச் 19:**

இஸ்ரேல் தாக்குதலில் ஈரானின் 2-வது மிகப்பெரிய தலைவரான அலி லாரிஜானியும் மூத்த தளபதி கோலம்ரெசா சுலைமானியும் உயிரிழந்துவிட்டதாக கூறப்படுகிறது.

கடந்த பிப்.28ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரது மகன் மோஜ்தபா காமேனி புதிய உச்ச தலைவராக நியமிக்கப்பட்டார். ஆனால் இஸ்ரேல் போர் விமான தாக்குதலில் மோஜ்தபா பலத்த காயமடைந்து கோமாவில் இருப்பதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த சூழலில் மறைந்த அயத்துல்லா அலி காமேனியின் வலது கரமாக செயல்பட்ட அலி லாரிஜானி, ஈரானை வழி நடத்தி வந்ததாகக் கூறப்பட்டது. இந்த சூழலில் கடந்த திங்கள் கிழமை நள்ளிரவு முதல் செவ்வாய்க்கிழமை அதிகாலை வரை ஈரான் தலைநகர் டெஹ்ரானின் முக்கிய ராணுவ தளங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தின.



இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்ட வீடியோவில், "இஸ்ரேல் வான் வழி தாக்குதலில் அலி லாரிஜானி கொல்லப்பட்டுவிட்டார். இவர் இஸ்லாமிய புரட்சிகர படையின் தலைவராக இருந்தார். ஈரான் ராணுவத்தின் பசிஜ் படைத் தளபதி சுலைமானியும் கொல்லப்பட்டார். இந்த நேரத்தில் ஈரானின் ஆட்சியை பொதுமக்கள் கைப்பற்ற வேண்டும்" என்றார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு டெஹ்ரானில் நடைபெற்ற பேரணியில் அலி லாரிஜானி பங்கேற்றார். அப்போது முதல் அவரை தீவிரமாக கண்காணித்து, அவர் தங்கியிருந்த ராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் 300 ஈரான் ராணுவ வீரர்கள் உயிரிழந்திருப்பதாகவும் இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. அலி லாரிஜானி, சுலைமானியின் உயிரிழப்பை ஈரான் அரசு உறுதி செய்யவில்லை.

## 2,200 கிலோ பங்கர் பஸ்டர் குண்டுகள் ஹோர்முஸ் நீரிணை அருகே வீசி ஈரானை மிரட்டிய அமெரிக்கா!


**அமெரிக்கா, மார்ச் 19:**

ஈரானின் ராணுவத்தை அச்சுறுத்தும் விதமாக ஹோர்முஸ் நீரிணை அருகே சுமார் 2,200 கிலோ பங்கர் பஸ்டர் குண்டுகளைப் போட்டு அமெரிக்கா புதன்கிழமை தாக்குதல் நடத்தியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அணுஆயுதக்கொள்கையைக் கைவிடக் கோரி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டு ராணுவங்களும் சேர்ந்து கடந்த பிப். 28 ஆம் தேதி நடத்திய கூட்டுத் தாக்குதலில் ஈரானின் மதகுரு உச்சத் தலைவர் அலி அயத்துல்லா கமேனி கொல்லப்பட்ட பின்னர், அமெரிக்கா - ஈரான் இடையே தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்தப் போர் இரண்டு வாரங்களைக் கடந்த நிலையிலும், அமெரிக்கா ராணுவத்தினர் ஈரானின் கட்டமைப்புகள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், உலகளவிலான வர்த்தகத்தை இணைக்கும் கடல்வழிப் பாதையான ஈரானின் தெற்கு கடற்கரைப் பகுதியில் ஹோர்முஸ் நீரிணை அருகே சுமார் 5,000 பவுண்ட் (2,200 கிலோ) பங்கர் பஸ்டர் குண்டுகள் போடப்பட்டதாகவும், இந்த சோதனை வெற்றி பெற்றுள்ளதாகவும் அமெரிக்க ராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.




இந்தத் தாக்குதல்கள், ஹோர்முஸ் நீரிணையில் சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கு அச்சுறுத்தலாக இருந்த ஈரானின் கப்பல் எதிர்ப்பு க்ரூஸ் கப்பல் மீது ஏவுகணைகளைக் குறிவைத்ததாகவும் அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரானில் அமெரிக்க ராணுவத்தின் நடவடிக்கைகளில் எங்களுக்கு விருப்பமில்லை என பெரும்பாலான நேட்டோ நட்பு நாடுகள் தெரிவித்திருந்த நிலையில், சில மணிநேரங்களிலேயே இந்தத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளது உலகளவில் மீண்டும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

## 'சிலிண்டரை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை;

**புதுடெல்லி, மார்ச் 19:**

சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போரால் இந்தியாவில் எரிபொருள் நெருக்கடி கவலைக்குரிய விஷயமாகவே நீடிக்கிறது. எனினும், சமையல் எரிவாயு (எல்பிஜி) விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அதேநேரம் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மாற்றாக, சமையலுக்கு மின்சாரம் உள்ளிட்ட இதர எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது கூடுதல் நலம் பயக்கும்.

தற்போது எந்தவொரு விநியோகஸ்தரிடமும் கையிருப்பு இல்லாத நிலை ஏற்படவில்லை. வீடுகளுக்கான சிலிண்டர் விநியோகம் வழக்கம் போலவே நடைபெற்று வருகிறது. வணிக ரீதியிலான எல்பிஜி விநியோகம் தொடக்கத்தில் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தாலும், தற்போது பகுதி அளவில் சீரமைக்கப்பட்டுள்ளது. வணிகப் பயன்பாட்டாளர்கள் படிப்படியாகக் குழாய் வழி இயற்கை எரிவாயுவுக்கு மாற வேண்டும்.

எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்குபவர்கள் மற்றும் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களில் நாடு முழுவதும் 12,000-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு சுஜாதா தெரிவித்தார்.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 இடங்கள் ஒதுக்கீடு!

**சென்னை, மார்ச் 19:**

தமிழ்நாட்டில் பேரவைத் தேர்தலுக்கு தேதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலுக்கான வேலைகளை ஆளும் திமுகவும், எதிர்க்கட்சியான அதிமுகவும், புதுவரவான தவெகவும் தீவிரப்படுத்தி வருகின்றன.

200 தொகுதிகளில் வென்று இரண்டாவது முறையாக ஆட்சியைப் பிடிப்போம் எனும் முழக்கத்துடன் களத்தில் இருக்கும் திமுக, தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. திமுக கூட்டணியில் மொத்தம் 21 கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இதில், இ.யூ.மு.லீக், மமக., காங்கிரஸ், மதிமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட், விசிக, தவாக, மக்கள் விடுதலை கட்சி, ம.நீ.ம., கொ.ம.தே.க., எஸ்.டி.பி.ஐ., ம.ஜ.க., முக்குலத்தோர் புலிப்படை, கொங்கு இளைஞர் பேரவை உள்ளிட்ட கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.



இதுவரை நடத்த பேச்சுவார்த்தை மற்றும் தொகுதிப் பங்கீட்டில் திமுக தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸுக்கு 28 தொகுதிகளும், ம.தி.மு.கவுக்கு 4 தொகுதிகளும், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சிக்கு 2 இடங்களும், கொங்கு மக்கள் தேசிய கட்சிக்கு 2 தொகுதிகளும், மனிதநேய மக்கள் கட்சி 2 தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கடந்த 2021 ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலில் 6 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு, ஒரு இடங்கள் குறைத்து 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திமுக தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலர் மு. வீரபாண்டியன், முன்னாள் மாநிலச் செயலர் இரா. முத்தரசன் முன்னிலையில் தொகுதிப் பங்கீடு ஒப்பந்த உடன்பாடு கையெழுத்தானது.

நான்கு கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் திமுக - இந்திய கம்யூனிஸ்ட் இடையே தொகுதி பங்கீடு ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டுள்ளது.

திமுக கூட்டணியில், காங்கிரஸ் கட்சி தனது கை சின்னத்திலும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஏணிச் சின்னத்திலும், மனித நேய மக்கள் கட்சி உதயசூரியன் சின்னத்திலும், ம.தி.மு.க. மூன்று தொகுதிகளில் உதய சூரியன் சின்னத்திலும் ஒரு தொகுதியில் தனிச் சின்னத்திலும் போட்டியிடுவது என முடிவாகியுள்ளது.

இந்த ஐந்து கட்சிகள் போக இன்னும் திமுக கூட்டணியில், அக்கட்சியை தவிர்த்து மொத்தம் 15 கட்சிகள் உள்ளன. இதுவரை திமுக கூட்டணியில் ஆறு கட்சிகளுக்கு 43 தொகுதிகளை திமுக தலைமை ஒதுக்கியுள்ள நிலையில், தேமுதிக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மக்கள் நீதி மய்யம், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.



# கோவையில் சட்டசபை தேர்தலில் 2 எம்.எல்.ஏ.க்களை தேர்ந்தெடுக்க உள்ள வினோத கிராமம்



**கோவை, மார்ச் 19:** தமிழக சட்டசபைக்கு அடுத்த மாதம் 23-ந்தேதி தேர்தல் நடக்க உள்ளது. தமிழகத்தில் உள்ள நகரம் முதல் கிராமம் வரையிலும் மக்கள் தங்கள் ஜனநாயக கடமையை ஆற்ற தயாராகி வருகின்றனர்.

பொதுவாகவே ஒரு கிராமம் இருக்கிறது என்றால் அது ஒரு ஊராட்சியின் கீழ் இருக்கும். ஒரு சட்டசபை தொகுதி, ஒரு பாராளுமன்ற தொகுதியின் கீழ் தான் இருக்கும்.தேர்தல் சமயங்களில் மக்கள் அந்த கிராமத்தில் அமைக்கப்படும் வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று வாக்களிப்பார்கள்.

ஆனால் தமிழகத்தில், 4 உள்ளாட்சி அமைப்புகள், 2 சட்டசபை தொகுதிகள், 2 மக்களவை தொகுதிகளின் கீழ் வரக்கூடிய ஒரு வினோத கிராமம் கோவை மாவட்டத்தில் இருக்கிறது.

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி அடுத்த பொன்னாண்டம்பாளையம் கிராமம் தான் 2 சட்டசபை தொகுதிகளின் கீழ் வரக்கூடிய அந்த வினோத கிராமம் ஆகும். இக்கிராமத்தில் 300 குடும்பங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். இதுதவிர புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் அதிகளவில் இங்கு வசதித்து வருகிறார்கள்.

இங்கு வசிக்கும் பெரும் பாலானோர் தங்களின் வாழ்வாதாரத்துக்கு தொழிற்சாலைகளையும், தொழில் நிறுவனங்களையுமே சார்ந்துள்ளனர்.

இந்த கிராமத்தில் மொத்தம் 7 தெருக்கள் உள்ளன. இந்த 7 தெருக்களும் நான்கு உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளைஒன்றையொன்று சந்திக்கின்றன.

மேலும் இந்த கிராமத்தில் உள்ள 7 தெருக்கள் மோப்பிரிபாளையம் பேரூராட்சி மற்றும் கணியூர், அரசூர், நாரணபுரம் ஆகிய கிராமப் பஞ்சாயத்துகள் என நான்கு உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

இப்பகுதியில் உள்ள 200 வீடுகளில் 650 வாக்காளர்கள் வசிக்கும் பெரும் பகுதி கணியூர் பஞ்சாயத்து எல்லைக்குள்தான் வருகின்றன. சில வீடுகள் அரசூர் பஞ்சாயத்து கீழும், சில வீடுகள் அவிநாசி சட்டசபை தொகுதிக்கு உட்பட்ட அன்னூர் நாரணபுரம் பஞ்சாயத்துக்கு கீழும் வருகின்றன. 30 வீடுகள் மட்டுமே மோப்பிரிபாளையம் பேரூராட்சியின் கீழ் வருகின்றது.

அதிலும் இந்த கிராமத்தின் ஒரு பகுதி, அவிநாசி சட்டசபை தொகுதியிலும், நீலகிரி பாராளுமன்ற தொகுதியிலும் வருகிறது. மீதம் உள்ள இடங்கள் சூலூர் சட்டசபை தொகுதியிலும், கோவை பாராளுமன்ற தொகுதியிலும் வருகின்றன.

தற்போது அடுத்த மாதம் 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. இதில் ஒரு பகுதியினர் சூலூர் சட்டசபையில் போட்டியிடக் கூடிய வேட்பாளர்களுக்கும், ஒரு பகுதியினர் அவினாசி சட்டசபை தொகுதியில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க உள்ளனர்.

இதற்காக அந்த கிராமத்தில் 2 வாக்குச்சாவடி மையங்களும் அமைக்கப்பட்டு வருகிறது.

ஒரே கிராமம் தான் ஆனால் தொகுதி 2 ஆக வருவதால் ஒரே கிராமத்தை சேர்ந்த மக்கள் வெவ்வேறு தொகுதிகளில் போட்டியிடும் வாக்காளர்களுக்கு வாக்களித்து 2 எம்.எல்.ஏ.க்களை தேர்ந்தெடுக்க உள்ளது விசித்திரத்தை ஏற்படுத்தி உள்ளது.

இது ஒருவிதத்தில் விநோதமாக இருந்தாலும், இந்த விநோத சூழலால் அந்த கிராம மக்களுக்கு எந்தவித ஆதாயமும் கிடைத்ததில்லை. மாறாக, அடிப்படை வசதிகளைப் பெறுவதற்குக்கூட பல நிர்வாகச் சிக்கல்களை அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது.

எனவே, தங்கள் கிராமத்தை சூலூர் சட்டசபைக்கு உட்பட்ட கணியூர் ஊராட்சி எல்லைக்குள் ஒரே உள்ளாட்சி அமைப்பின் கீழ் இணைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## பண்டிகையையொட்டி பொள்ளாச்சி மாட்டுச்சந்தையில் ரூ.6 கோடிக்கு மாடுகள் விற்பனை



**பொள்ளாச்சி, மார்ச்19:** கோவை மாவட்டம் பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டின் ஒரு பகுதியில் மாட்டுசந்தை செயல்பட்டு வருகிறது.

வாரந்தோறும் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் இந்த மாட்டு சந்தை நடைபெறுவது வழக்கம்.

இந்த சந்தைக்கு பொள்ளாச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் அதிகளவிலான மாடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். கடந்த மாத தொடக்கத்தில் மாடுகள் வரத்து ஓரளவு இருந்ததுடன், கேரள வியாபாரிகள் வருகையும் அதிகரிப்பால் மாடுகள் கூடுதல் விலைக்கு விற்பனையானது.

அதன்பின்பு கடந்த 2-வது வாரத்தில் இருந்து புனிதவெள்ளி நோன்பு மற்றும் ரம்ஜான் நோன்பு கடைபிடிக்கப்படுவதால் சந்தைக்கு மாடுகள் வரத்து குறைவாக இருந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை என்பதால் மாட்டுசந்தை கூடியது. பொள்ளாச்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்தும் கர்நாடக மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்தும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் சந்தைக்கு விற்பனைக்கு வந்திருந்தன.

22-ந்தேதி ரம்ஜான் பண்டிகை வருவதால் நேற்று சந்தையில் விற்பனை விறு,விறுப்பாக நடந்தது. வியாபாரிகளும் அதிகளவில் வந்திருந்து மாடுகளை வாங்கி சென்றனர்.

இதனால் நேற்று ஒரே நாளில் பொள்ளாச்சி மாட்டுச்சந்தையில் ரூ.6கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக மாட்டு வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மாட்டு வியாபாரிகள்

# விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக ஆலோசனைக்கூட்டம்






**விழுப்புரம், மார்ச் 19:** விழுப்புரம் மாவட்டம் வடக்கு திமுக அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் செஞ்சி தனியார் திருமண மண்டபத்தில் நடைப்பெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சிறப்புரையை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் ஒன்றிய செயலாள்கள் கழக ஆக்கப்பணிகள், தேர்தல் வியூக உரைகளை ஆற்றினர்.

தேர்தல் நேரம் சிறப்பு அவசரக் கூட்டம் என்பதால் கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் எல்லோருடைய எதிர்பார்ப்பும் செஞ்சித் தொகுதி வேட்பாளர் மற்றும் மயிலம் தொகுதி திண்டிவனம் தொகுதி தலைமைக் கழக அண்ணா அறிவாலய அதிகாரப்பூர்வ அறிவிப்புக்காக காத்திருப்பு என்பதை மட்டுமே அரசியல் நோக்கர்கள் சமூக ஆர்வலர்கள் எதிர்பார்ப்பாக இருந்தது. விழுப்புரம் மாவட்ட வடக்கு திமுக வெற்றித் தொகுதிகளாய் களம் காண தயாராகி வருகிறது.

அகரம் ராமதாஸ்
செய்தியாளர்

# பக்கபட்டியில் நடமாடும் டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம் மூலம் காசநோய் கண்டறியும் சிறப்பு முகாம்



**தூத்துக்குடி, மார்ச் 19:** தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு காசநோய் பிரிவு மற்றும் டி.வி.எஸ். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை இணைந்து நடத்தும் நடமாடும் டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம் மூலம் காசநோய் கண்டறியும் சிறப்பு முகாம் (18.03.2026) இன்று வல்லநாடு அருகேயுள்ள பக்கப்பட்டி கிராமத்தில் வைத்து நடைபெற்றது.

முகாமினை வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.க.சண்முக ராஜா அவர்கள் துவக்கி வைத்தார்கள்/ மாவட்ட காசநோய் மைய நலக் கல்வியாளர் திரு.ஆ.முத்துகுமார் அவர்கள் முன்னிலை வைத்தார்கள்.

முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் திரு.அ.அப்துல் ரஹீம் ஹீரா அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இம்முகாமில் 41 நபர்களுக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டது. 10 நபர்களுக்கு சளி மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முதுநிலை காசநோய் ஆய்வுக்கூட மேற்பார்வையாளர் திரு.ச.இசக்கி மஹாராஜன் அவர்கள் நன்றி கூறினார்.

இம்முகாமில் எக்ஸ்ரே நுட்பனர் திருமதி.ச.கிருஷ்டி, சுகாதார பார்வையாளர் திருமதி.ந.முத்து லட்சுமி, சுகாதார தன்னார்வலர்கள் திருமதி.ச.ஜெயலக்ஷ்மி, திருமதி.கா.ஷோபனா தேவி, திரு.ப.முத்துவேல், சுகாதாரத்துறை பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை வல்லநாடு காசநோய் பிரிவு மற்றும் டி.வி. எஸ். சீனிவாசன் சேவைகள் அறக்கட்டளை ஆகியோர்கள் இணைந்து செய்திருந்தார்கள்.

# தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சந்தி சிரிக்கிறது- நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு



**நெல்லை, மார்ச் 19:** நெல்லையில் நேற்று பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

மதுரை மாவட்டம் பேரையூரை சேர்ந்த தி.மு.க. கலை இலக்கியப் பிரிவு அமைப்பாளர் ஆர்.கே. ராஜா தலைமையில் சுமார் 50-க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் அக்கட்சியில் இருந்து விலகி பா.ஜ.க.வில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தனித்து போட்டியிடுவது குறித்து நான் கருத்து சொல்ல முடியாது. தனித்துப் போட்டியிடுவது அல்லது கூட்டணி வைப்பது என்பது அவர்களின் உரிமை. இதைப் பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெளிவுபடுத்தி விட்டேன்.

தி.மு.க. கூட்டணி பலமானது என்ற பேச்சுகளை மறுக்கிறேன். மக்களிடம் இது குறித்துப் பேச்சு இல்லை. எவ்வளவு பெரிய பணபலம் இருந்தாலும், இந்தியாவை டாட்டாவோ, பிர்லாவோ ஆள முடியாது. தி.மு.க.விடம் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் கோடி ரூபாய் பணம் இருக்கலாம்.

ஆனால் மக்கள் மனம் யாரிடம் இருக்கிறது என்பதுதான் முக்கியம். 5 வருஷத்துக்கு முன்னால் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் தி.மு.க. நிறைவேற்றவில்லை.

சொத்து வரி உயர்த்தப்படாது என்று கூறிவிட்டு 300 மடங்கு உயர்த்தி உள்ளனர். மின்கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என கூறிவிட்டு உயர்த்தி விட்டனர். மாதந்தோறும் மின் கணக்கெடுப்பு முறை இன்னமும் அமல்படுத்தப்படவில்லை.

தமிழகத்திற்கு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மத்திய அரசு இதுவரை ரூ.14 லட்சம் கோடி வழங்கி உள்ளது. ஆனால், மாநில அரசு எதையுமே தரவில்லை எனப் பொய் கூறுகிறது. ரேஷன் கடைகளில் மத்திய அரசு இலவசமாக வழங்கும் பொருட்களுக்கு, மாநில அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டி தங்களது திட்டம் போல காட்டி வருகிறது.

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சந்தி சிரிக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் 22 லட்சம் கிலோ கஞ்சா பிடிபட்டுள்ளது. 8,900 படுகொலைகள் நடந்துள்ளது. அதில் 1,977 கொலைகள் பெண்களுக்கு எதிராகவும், 387 கொலைகள் குழந்தைகளுக்கு எதிராகவும் நடந்துள்ளது.

பிளஸ்-2 தேர்வில் 500-க்கு 495 மதிப்பெண் பெற்ற மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் கொடூரமானது. லாக்கப் மரணங்கள் மற்றும் போலீஸ் நிலையத்திலேயே பெண்களுக்கு எதிராக நடக்கும் அத்துமீறல்கள் இந்த ஆட்சியில் அதிகரித்துள்ளது.

வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் 12 நாட்கள் அவகாசம் உள்ளது. பா.ஜ.க.வின் தேர்தல் பொறுப்பாளர் மத்திய மந்திரி பியூஷ் கோயல் சென்னை வர உள்ளார். அவர் வந்தவுடன் தொகுதி பங்கீடு குறித்து பேசி இறுதி செய்யப்படும்.

அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து நாங்கள் ஒற்றுமையாக செயல்படுவோம். தோல்வி பயத்தினால் தொகுதி மாறுவதாக என்னை பற்றி ஓ.பி.எஸ்.சின் மகன் கூறி உள்ளார்.

# ஆவடி தொகுதியில் சசிகலா போட்டியிட விருப்ப மனு



**சென்னை,மார்ச் 19:** தமிழகத்தில் அடுத்த மாதம் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலை சந்திப்பதற்கு அரசியல் கட்சிகள் தீவிரமாகி வருகின்றன.

சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் என்ற பெயரிலான கட்சியில் இணைந்துள்ள சசிகலா அந்த கட்சியின் பொதுச்செயலாளராகி உள்ளார்.

சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுபவர்கள் இன்று முதல் விருப்ப மனுக்களை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இதைத்தொடர்ந்து சசிகலா ஆதரவாளர்கள் அவரது இல்லத்தில் விருப்ப மனுக்களை பெற்றுக் கொண்டனர் .

ஆவடி தொகுதியில் சசிகலா போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து கட்சியினர் மனுக்களை வாங்கினார்கள். இதேபோன்று பூந்தமல்லி ,திருப்போரூர் உள்ளிட்ட சென்னையை சுற்றியுள்ள சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்தும் மனுக்களை வாங்கினார்கள்.

## நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கையை இன்று வெளியிடுகிறார் சீமான்



**சென்னை,மார்ச் 19:** நாம் தமிழர் கட்சியின் தேர்தல் அறிக்கை செயல்பாட்டு வரைவு என்ற பெயரில் நாளை வெளியிடப்படுகிறது.

சென்னை கிண்டியில் உள்ள ஓட்டலில் வைத்து காலை 10 மணி அளவில் தேர்தல் அறிக்கையை அந்த கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட உள்ளார்.

ஒவ்வொரு தேர்தலிலும் நாம் தமிழர் கட்சி சார்பில் வெளியிடப்படும் தேர்தல் அறிக்கைகளில் இலவச அறிவிப்புகள் எதுவும் இருக்காது. அதை தாண்டி வேளாண் தொழிலை ஊக்குவிப்பது தொடர்பாகவும், வேலைவாய்ப்பைபெருக்குவது குறித்த அறிவிப்புகளும் இடம் பெற்றிருக்கும்.

இன்று வெளியிடப்படும் தேர்தல் அறிக்கையிலும் அது போன்ற விஷயங்கள் பிரதானமாக இடம் பெற்றிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தேர்தல் நடத்தை விதிமுறை அமல்: தமிழ்நாட்டில் ரூ.42.65 கோடி பறிமுதல்!



**சென்னை,மார்ச் 19:** தமிழ்நாடு உட்பட 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது. இதையடுத்து 5 மாநிலங்களிலும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தன.

இதனடிப்படையில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்படும் தங்கம், வெள்ளி, மற்றும் பணம் ஆகியவை தேர்தல் அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது.

சந்தேகத்திற்கிடமான பெரிய அளவிலான வங்கிப் பரிவர்த்தனைகளும் கண்காணிக்கப்படுகின்றன.

இந்நிலையில் தற்போதுவரை தமிழ்நாட்டில் தேர்தல் பறக்கும் படையினரால் ரூ.42.65 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில்,

'தற்போது நடைபெற்று வரும் தேர்தல் செலவினக் கண்காணிப்பு மற்றும் அமலாக்க நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, பல்வேறு பிரிவுகளின் கீழ் அதிகாரிகள் கணிசமான அளவு பொருட்களைப் பறிமுதல் செய்துள்ளனர். 18 மார்ச் 2026 அன்றைய நிலவரப்படி, பறிமுதல் செய்யப்பட்ட மொத்த மதிப்பு ரூ.42.65 கோடி ஆகும்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

ரொக்கம் - ரூ.2.37 கோடி
மதுபானம் - ரூ.0.18 கோடி
போதைப்பொருட்கள் - ரூ.2.88 கோடி
விலைமதிப்பற்ற உலோகங்கள் - ரூ.16.42 கோடி
இலவசங்கள்/ பிற பொருட்கள் - ரூ.20.80 கோடி

தேர்தல் செலவின கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் அமலாக்க முகமைகள், சட்டவிரோதப் பணப் புழக்கம், வாக்காளர்களை கவர வழங்கப்படும் இலவசப் பொருட்கள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருட்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாகர்கோவில் கோர்ட்டுக்கு 4-வது முறையாக வெடிகுண்டு மிரட்டல்



**நாகர்கோவில், மார்ச் 19:** நாகர்கோவிலில் மாவட்ட நீதிமன்ற சாலையில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. இதில் மாவட்ட நீதிமன்ற அலுவலகம் மற்றும் மாவட்ட சமரச மையத்திற்கு இன்று இ-மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்தது. அதில் இன்று 2 இடங்களில் வெடிகுண்டு வெடிக்கும் என்று கூறப்பட்டிருந்தது. இதையடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார், வெடிகுண்டு நிபுணர்களுடன் விரைந்து வந்து மாவட்ட நீதிமன்ற அலுவலகம் மற்றும் சமரச தீர்வு மையத்தில் மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் சோதனை நடத்தினர். மோப்ப நாய் வரவழைக்கப்பட்டும் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையின்போது மாவட்ட நீதிமன்ற அலுவலக ஊழியர்கள் வெளியேற்றப்பட்டு சோதனை நடத்தப்பட்டது. கோர்ட்டு வளாகத்தில் நிறுத்தப்பட்டு இருந்த கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்களிலும் சோதனை நடந்தது.

அனைத்து கோர்ட்டுகளிலும் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக இந்த சோதனை நீடித்தது. ஆனால் வெடிகுண்டு எதுவும் சிக்கவில்லை. வெடிகுண்டு மிரட்டல் காரணமாக கோர்ட்டில் அலுவலக பணிகள் பாதிக்கப்பட்டன. ஒரு சில கோர்ட்டுகளில் வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டன. வெடிகுண்டு மிரட்டல் விடுத்த இ-மெயில் எங்கிருந்து வந்தது? என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

கடந்த ஒரு மாதத்தில் 4-வது முறையாக கோர்ட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.













Special Invitation

to retired seniors house wives businessmen bankers CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your second Innings with a career business opportunity

♦ Flexible timing unlimited incentive

♦ No target work from home training provided For successful business.

Contact Mr. Irudaya Raj
Ph.9486634780








ADIYOGI

REAL ESTATE WHOLESALE

VADACHENNAI CALL DRIVER



ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901

WANTED

JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்

• இடங்கள்:
  • பெருங்குடி, துரைப் பாக்கம்
  • காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  • விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97







WANTED

Needed female staff to look after children, patients.

Contact

9150989424













WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்ப்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

7540003588




WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872

# கவிதை அரங்கம்!





நெஞ்சின் ஒவ்வொரு
துடிப்பிலும்
உன் நினைவுகள்
சுருதியாகி வாழ்கின்றன

காதல் என்பது ஒரு மலர்
அதன் மணம் என்றும்
மறையாது

என் இதயத்தில் நீயே
இருக்கின்றாய்
எனக்கு உன்னுடைய
பார்வையில் மட்டும்
உலகம் ஓயாமல் நகர்கிறது

என்னுடைய உலகம்
உன்னில் ஆரம்பிக்கும்
உன்னுடன் முடிகிறது

காதல் என்பது
எட்ட முடியாத விரல்
அது உன் அருகில்
என்னை தொட்டது

நிழலாக கூட
நீ என்னை தழுவும் போது
இரவும் ஒரு காதல் கவிதை
ஆகிறது

# வாழ்க்கை தத்துவம்...



சிரிப்பை இயல்பாக்கி
கொள்ளுங்கள் மனதில்
கவலை இருப்பினும்
அகம் போல முகமும்
அழகு பெறும்

எதையும் மனம் விட்டு
பேசாத வரை எல்லாம்
மன அழுத்தமே

தேடிப் போகாதே
அலட்சியப்படுத்தப் படுவாய்
எதிர்பார்க்காதே
ஏமாற்றப் படுவாய்

நிரூபித்து கொண்டே
இருப்பததை விட பேசாமல்
இருப்பது நல்லது

# ஒருப்பக்கம் கனவு, மறுபக்கம் உறவு

தூங்கிக் கொண்டு இருக்கும் போதுதான் இந்த எழவெடுத்தக் கனவு வரவேண்டுமா? என்று சொல்லிக் கொண்டே படுக்கைவிட்டு அரைத் தூக்கத்துடன் எழுந்து நடந்தான். என்றைக்காவது அவன் நிம்மதியாக தூங்கியிருந்தால் தானே இன்றைக்கு தூங்கயிருக்க முடியும். அதுதான் நடந்ததேயில்லையே. எப்படி நிம்மதியாகத் தூங்க முடியும். நிம்மதியைத்தான் வாடகைவிட்டு பல மாதங்கள் ஆகிவிட்டதே. காலை உணவு என்பது நீண்டநாள் கனவாகிருக்கிறது. அந்தக் கனவும் அதுதான். அவ்வளவு வறுமை என்றுச் சொல்லிவிட முடியாது. ஆனாலும் அது வறுமைதான். இந்த வறுமை அவன் வீட்டை விட்டு வெளியே ஓடிப் போனப் பிறகுதான் வந்தது. அவ்வப்போது யோசித்துப் பார்ப்பான். கால் மேலே கால் போட்டுக்கொண்டு, கட்டிலில் ஒய்யாரமாக எந்நேரமும் தூக்கம். கைக்கெட்டும் தூரத்தில் மூன்றுவேளை சோறு. ஊர்க் காளையாக திரிந்தது. உடலை துளியும் வருத்தாத வாழ்க்கை. அவ்வப்போது நினைவுகள் அசைப்போடும். இப்போது என்ன செய்ய? எவ்வளவு சோம்பேறியா இருந்தாலும் கோவம் வரதானே செய்யும். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பார்கள். இவன் வாழ்க்கையில் இந்தப் பழமொழியை மாற்றிதான் எழுத வேண்டும். அந்தக் கோவம்தான் இன்றைக்கு திருச்சியில் பசியோடு கனவை நோக்கி ஓட செய்தது.


கிராமத்தில் இருந்து ஓடி வந்த அவனுக்கு பட்டணம் அவ்வளவு பிடிப்படவில்லை என்றாலும் இன்றுவரை அவனுக்கு ஊருக்கு செல்ல வேண்டுமென்ற எண்ணம் துளிக்கூட வந்ததில்லை. கனவுகளைத் துரத்திக் கொண்டு எல்லோரும் சென்னைத் தானே ஓடுவார்கள். இவன் கனவும் இவனைப் போலவே சற்று வித்தியாசம் நிறைந்தது. ஒவ்வொருப் பத்திரிக்கை ஆபிஸ_க்கும் ஏறி இறங்கி ஏறி இறங்கி இதோடு முப்பத்திரண்டு முறை தைத்தாகிவிட்டது. இன்னும் தைக்க இடம் இருக்கிறது. ஒரு நாள் புதிய செருப்பு வாங்கிவிடுவோம் என்ற விடாப்பிடியான நம்பிக்கையுடன் அவன் பயணமும் தேய்ந்துக் கொண்டு போகிறது. காலை ஒரு டீ, மாலை ஒரு டீ, இரவும் அதுதான் என்று சொல்லிவிட முடியாது. அதுடன் ஒரு பண் அல்லது சமோசாவோ. போண்டாவோ சேர்ந்திருக்கும். மீண்டும் அதே உத்வேகத்துடன் தினமும் அந்த காலை விடிந்துக்கொண்டுதான் இருக்கிறது. அன்று அவசர அவசரமாக பாத்திரிக்கை ஆபீஸ{க்கு சென்றுக் கொண்டிருக்கும்போது தான் அதுவும் நடந்தது. இப்போது அவனுக்கு ஒரு குச்சியும் துணைக்கு இருக்கிறது. வழக்கம்போல அவ்வளவு வேகமாக நடப்பதில்லை. முறிந்தக் காலுடன் யார் தான் அப்படி நடக்க முடியும்.

சரியாவதற்கு இன்றோடு மூன்று மாதம் ஆகிவிட்டது. மெல்ல அந்த கட்டைப்பிரிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. அவ்வளவு ஊன்றி நடக்க முடியவில்லை என்றாலும் மெல்ல மெல்ல ஆமைப் போல நடந்து, வழக்கம்போல் குடிக்கும் அதே டீக்கடையை அடைந்தான்.

ண்ணா... ஒரு டீ... என்று சொல்லிவிட்டு அருகில் இருக்கும் பத்திரிக்கை எடுத்து புரட்டி படிக்க ஆரம்பித்தான். ஒருப் பக்கம் இன்பம். மறுபக்கம் துன்பம். கண்ணீர் அவனை அனுமதிக் கேட்கவில்லை. பத்திரிக்கையில் துளிதுளியாக விழ ஆரம்பித்தது. மழை யாரைக்கேட்டு வரும். ஊருக்கு செல்வதற்கு ஓடோடி பஸ்ஸை பிடித்தான். புதிய செருப்புக் கடிக்க கடிக்க கண்ணீர் இன்னும் பெருக்கெடுக்கிறது. அதுமட்டுமே காரணம் கிடையாது. யாரைத்தான் அந்தச் செய்திக் கண் கலங்க வைக்காது. இனி அவன் வீடு மட்டுமல்ல அவனும் அனாதைதான். ஒரு பக்கம் கனவு மறுபக்கம் உறவு. இனி அவன் கால்கள் எதை நோக்கி பயணிக்கும்?

**-துங்கன்.**
கோயம்புத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*டன் கணக்கில் துணி துவைக்கும் இடம் எது.?*

*விடை: WASHING (TON) தான்.*

*குறைகக்கிற நாய் கடிக்காது ஏன் தெரியுமா.?*

*விடை: ஒரே சமயத்தில் இரண்டு வேலையை எப்படி செய்ய முடியும்.*



# தினம் ஒரு சமையல்



## கருணைக்கிழங்கு ரோஸ்ட்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| கருணைக்கிழங்கு | -1/4 கிலோ |
| மஞ்சள் தூள் | -1/4 டீஸ்பூன் |
| உப்பு | -தேவையான அளவு |
| புளி துண்டு | -1 விரல் அளவு |
| மிளகாய்த்தூள் | -1 டீஸ்பூன் |
| மல்லித்தூள் | -1/2 டீஸ்பூன் |
| பெருங்காயத்தூள் | -2 சிட்டிகை |
| சீரகத்தூள் | -1/2 டீஸ்பூன் |
| மிளகுத்தூள் | -1/2 டீஸ்பூன் |
| பொரிப்பதற்கு எண்ணெய் | -தேவையான அளவு |
| கறிவேப்பிலை | -2 கொத்து |

செய்முறை:



கருணைக்கிழங்கை சுத்தம் செய்து நறுக்கி வைத்துக் கொள்ளவும்

ஒரு பாத்திரத்தில் கருணைக்கிழங்கு மஞ்சள் உப்பு, புளி தண்ணீர் இவை அனைத்தையும் சேர்த்து பாதி அளவு வேக வைத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்

ஒரு கடாயில் எண்ணெய் சேர்த்து வடிகட்டி வைத்துள்ள கருணைக்கிழங்கை பொரித்தெடுக்கவும்

ஒரு கடாயில் ஒரு டேபிள் ஸ்பூன் எண்ணெய் சேர்த்து மிளகுத்தூள் மல்லித்தூள் மிளகாய்த்தூள் பெருங்காயத்தூள், உப்பு, சீரகத்தூள் மிளகுத்தூள் இவை அனைத்தையும் சேர்த்து பின் கருவேப்பிலையும் சேர்த்து சிறுத்தியில் வைத்து ஒரு நிமிடம் வதக்கவும்

அதன் பின் பொரித்து வைத்துள்ள கருணைக்கிழங்கையும் சேர்த்து வதக்கி எடுக்கவும்

# வால்மிளகு பயன்கள்




வால்மிளகுத் தாவரம் மணமூட்டும் தாவரமாகும். திப்பிலி, வெற்றிலை, நல்ல மிளகு ஆகியவை ஒரே வகையைச் சார்ந்தவை. மிளகைப் போல் நிறத்திலும், உருவத்திலும் காணப்படும் இதன் வால் பகுதி மட்டும் சிறிது நீண்டு காணப்படும். இதன் காய், விதை இலை, வேர் அனைத்தும் மருத்துவப் பயன்களைக் கொண்டதாகும். இலங்கை, மலேசியா உள்ளிட்ட நாடுகளிலும், இந்தியாவில் அஸ்ஸாம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள மலைப்பகுதிகளில் மரமேறும் கொடியாக வளர்கிறது.

சில வால்மிளகை நெய்யில் வறுத்துப் பொடியாக்கி, தேனில் குழைத்து உண்ண தொண்டை வலி, தொண்டைக் கரகரப்பு, இருமல் குணமாகும்.

கொடி இலைகளை நீரிலிட்டு காய்த்து, இந்த நீரில் வாய் கொப்பளித்தால் தொண்டை வலி குணமாகும்.

சில வால்மிளகுகளுடன் ஒரு துண்டு சுக்கு, பன்னீர் விட்டு அரைத்து நெற்றிப் பொட்டில் பூசிட, தலைவலி தீரும்.

வால்மிளகை நீரில் போட்டு காய்த்து, வடிகட்டி இதோடு தேவையான இனிப்பு, பால் சேர்த்து அருந்த இருமல் தீரும்.

வால்மிளகுத் தூளை நெய்யில் குழைத்து உண்ண, வறட்டு இருமல் மாறும்.

பாலில் சிறிதளவு மஞ்சள் பொடி, வால்மிளகுப் பொடி கலந்து அருந்திட இருமல், தொண்டை வலி, சளித் தொல்லைகள் தீரும்.

குரல் வளம் பெற வால்மிளகுத் தூளை அடிக்கடி தேனில் குழைத்து உண்ணலாம்.

# தேர்தல் எல்லாம் நமக்கு செட் ஆகாது.. வெளிப்படையாக பேசிய நடிகர் விஜய் சேதுபதி



அரசன், TRAIN, SLUM DOG: 33, ஜெயிலர் 2, பாலாஜி தரணீதரன் படம், பாக்கெட் நாவல் என பல திரைப்படங்களை கைவசம் வைத்துள்ளார் மக்கள் செல்வன் நடிகர் விஜய் சேதுபதி.

இது தவிர, இயக்குநர் மணிகண்டன் இயக்கத்தில் காட்டான் என்கிற வெப் தொடரில் நடித்து முடித்துள்ளார். இந்த வெப் தொடரின் டீசர் சமீபத்தில் வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், விரைவில் ஜியோ ஹாட்ஸ்டாரில் வெளிவரவுள்ளது.

தனக்கு மனதில் என்ன தோன்றுகிறதோ அதை வெளிப்படையாக பேசுபவர் நடிகர் விஜய் சேதுபதி. அது எந்த விஷயமாக இருந்தாலும் அதை உடைத்து பேசிவிடுவார். இவரிடம் ரசிகர்களுக்கு பிடித்த குணங்களில் இதுவும் ஒன்று.

இந்த நிலையில், சமீபத்தில் இவர் பேசிய விஷயம் ஒன்று இணையத்தில் வைரலாகி வருகிறது. இதில், "தேர்தல் எல்லாம் நமக்கு செட் ஆகாது, ஏதாவது ஒரு பஞ்சாயத்துக்கு தீர்ப்பு சொல்லப்போய் பிறகு நம் படத்திற்கு ஏதாவது செஞ்சுருவாங்க என்கிற பயம் உள்ளது" என கூறியுள்ளார்.



ஜனனி சேலையில் அழகிய போஸ் கொடுத்து இருக்கும் போட்டோஷூட் ஸ்டில்கள் வெளியாகி இருக்கிறது. எப்படி இருக்கிறார் என பாருங்க.




# முன்பதிவில் வசூல் சாதனை படைக்கும் துரந்தர்.. இதுவரை இத்தனை கோடியா



இந்திய சினிமா ரசிகர்கள் அனைவரும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கும் திரைப்படம் துரந்தர் 2. நாளை வெளிவரவிருக்கும் இப்படம் வசூலில் மாபெரும் சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத்தை இயக்குநர் ஆதித்யா தார் இயக்க ரன்வீர் சிங் ஹீரோவாக நடித்திருந்தார். இவருடன் இணைந்து சாரா அர்ஜுன், மாதவன், சஞ்சய் தத், அர்ஜுன் ராம்பால் என பல நட்சத்திரங்கள் நடித்திருந்தனர்.

ஒவ்வொரு புதிய திரைப்படம் வெளிவரும்போதும், அப்படத்தின் வசூல் குறித்து ஒவ்வொரு நாளும் தொடர்ந்து பார்த்து வருகிறோம். அதே போல், ரிலீஸுக்கு முன், முன்பதிவில் அப்படம் எவ்வளவு வசூல் செய்தது என்பது குறித்தும் தகவல் வெளியாகும்.

அந்த வகையில், நாளை வெளிவரவிருக்கும் துரந்தர் 2 படத்தின் முன்பதிவு வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. இதுவரை நடைபெற்ற முன்பதிவில் துரந்தர் 2 திரைப்படம் ரூ. 130 கோடி வசூல் செய்துள்ளது.

கண்டிப்பாக முதல் நாள் துரந்தர் 2 ரூ. 200 கோடி வசூல் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என திரையுலக வட்டாரத்தில் உள்ளவர்கள் கூறுகின்றனர்.

# திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில் பற்றிய 12 சுவாரஸ்யமான உண்மைகள்”

“சிலை அமைப்பு”

பள்ளிகொண்ட கோலம் :

மூலவர் பத்மநாபஸ்வாமி., 18 அடி நீளத்தில் ஆதிசேஷன் மீது “அனந்தசயன” கோலத்தில் (யோக நித்திரை) காட்சிய அளிக்கிறார். இது கடாஷரகரத்தால் (மூலிகைகள்., பிசின் மற்றும் மணல் ஆகியவற்றின் கலவை) ஆன மும்மூர்த்திகளை (பிரம்மா., விஷ்ணு மற்றும் சிவன்) காட்டுகிறது.

“பிரதான சிலை” நேபாளத்தில் உள்ள கண்டகி நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட 12,500 சாலிகிராம கற்களால் ஆனது. சாலிகிராமங்கள் விஷ்ணுவின் நேரடி வெளிப்பாடாக வணங்கப்படும் மங்களகரமான கற்கள் ஆகும்.

இந்த கோவில் முதலில் மரத்தால் ஆனது., பின்னர் இன்று கிரானைட்டால் கட்டப்பட்டது. இது வருஷத்தின் நாட்களை., ஒவ்வொரு நாளுக்கும் ஒன்றென., குறிக்கும் வகையில் 365¼ தூண்களைக் கொண்டுள்ளது. 365 தூண்கள் மற்றும் கால் பகுதி தூணும் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணும் ஒரு ஒற்றைக்கல் ஆகும். அவை ஆண்டின் நாட்களையும் தூணின்., கால் பகுதியும் ¼ நாளையும் குறிக்கின்றன. (வருஷத்திற்கு 365¼ நாட்கள்)

“தரிசனத்திற்கு மூன்று கதவுகள்”

பத்மநாப ஸ்வாமி கோயிலின் மிகவும் தனித்துவமான அம்சம் என்னவென்றால்., அதில் அனந்தசயனம் (படுத்த)., அமர்ந்த மற்றும் நின்ற நிலையில் சிலைகள் உள்ளன.

கருவறைக்குள் இருக்கும் பிரதான சிலை அனந்தசயன நிலையில் உள்ளது., 18 அடி நீளம் கொண்டது., மூன்று கதவுகள் வழியாகக் காணலாம்

முதல் கதவு வழியாக இறைவனின் முகத்தையும் அவரது கையின் கீழ் உள்ள சிவலிங்கத்தையும் தரிசிக்கலாம்.


இரண்டாவது கதவு வழியாக இறைவனின் தொப்புளில் இருந்து வெளிப்படும் தாமரையின் மீது அமர்ந்திருக்கும் பிரம்மாவையும்., "உத்சவ மூர்த்தம்" மற்றும் மத்திய கதவு வழியாக நிற்கும் தோரணையில் சிலையையும் தரிசிக்கலாம். மகாவிஷ்ணு., லட்சுமி தேவி (செல்வத்தின் தெய்வம்) மற்றும் பூமி தேவி (பூமியின் தெய்வம்)

மற்றும்., மூன்றாவது கதவு இறைவனின் பாதங்கள்., மற்றும் உத்சவ மூர்த்தி.,” திருவிழா ஊர்வலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் சிலை அமர்ந்த நிலையில் உள்ளது.

“ஒத்தக்கல் மண்டபம்”

திருவிதாங்கூர் மன்னர் மட்டுமே இந்த





“ஒத்தக்கல் மண்டபத்தில்” நமஸ்காரம் செய்வார். அல்லது வணங்குவார். இறைவனின் சிலை இந்த “ஒத்தக்கல் மண்டபத்தில்” இருப்பதால்., வணங்குபவர் அல்லது இங்கு வைக்கப்பட்டுள்ள எந்தவொரு பொருளும் இனி இறைவனுக்குச் சொந்தமானது என்று அர்த்தமாகிறது.

பாரம்பரியத்தின் படி., மன்னர் ஒரு "பத்மநாப தாசர்" (விஷ்ணுவின் ஊழியர்) ஆவார். திருவாங்கூர் ராஜ்ஜியத்தை விஷ்ணு ஆண்டார் என்றும் நம்பப்படுகிறது.

*“ஒத்தக்கல் மண்டபம்” மேடை (ஒத்தக்கல் மேடை) விஷ்ணுவின் கருவறைக்கு முன்னால் உள்ளது. இது ஒற்றை கிரானைட் பலகையால் கட்டப்பட்டுள்ளது. அதன் கிரானைட் தூண்கள் தங்கத்தால் மூடப்பட்டிருக்கும்.

“கோயிலில் தங்கத்தின் பயன்பாடு”

ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியின் சிலை கிட்டத்தட்ட முழுவதுமாக தங்கத்தால் மூடப்பட்டிருக்கிறது. பிரதான ஸ்ரீகோவிலின் முன்புறத்தில் உள்ள ஒத்தக்கல் (அல்லது ஒற்றைக் கல்) மண்டபமும் தங்கத்தால் மூடப்பட்டிருக்கும். ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியின் கொடிக்கம்பமும் தங்கத்தால் மூடப்பட்டிருக்கும். மேலும்., பெருதிரு அமிர்த பூஜைக்கான ‘நவரத்தின பாயசம்’ என்று அழைக்கப்படும் நைவேத்யம் தங்கப் பாத்திரங்களில் இறைவனுக்குப் படைக்கப்படுகிறது. சமீபத்தில் தெரியவந்த ஒரு தனித்துவமான விஷயம் என்னவென்றால்., சிலையைச் சுத்தம் செய்யும் பொழுது பத்மநாபஸ்வாமி சிலையின் முகம் மற்றும் மார்பைத் தவிர மற்ற அனைத்தும் தங்கத்தால் வார்க்கப்பட்டுள்ளது. கிரீடத்துடன்., காது வளையங்கள்., புனிதமான பூணூல்., மார்பை மூடும் ஆபரணங்கள்., இறைவனின் கால்கள் மற்றும் வலது கை ஒரு பெரிய கங்கணம் அணிந்திருக்கும்., இடது கை ஏந்தியிருக்கும் தாமரை மற்றும் தாமரை தண்டு அனைத்தும் தங்கத்தால் ஆனது. முஸ்லிம் படையெடுப்பாளர்களிடமிருந்து சிலையை மறைக்க கடாஷரகாரம் (அடாகருப்பு நிற ஆயுர்வேத கலவையால் சிலையை மூடுவது) பயன்படுத்தப்பட்டது.

“மர்மமான அறைகள்”

இந்தக் கோவிலில் ‘AF’ என பெயரிடப்பட்ட கல்லாரங்கள் எனப்படும் 6 அறைகள் உள்ளன. மேலும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளின்படி ஜூலை 2ஆம் தேதி., 2011 அன்று ‘A’ அறை திறக்கப்பட்டது. இந்த அறையில் தங்க நகைகள்., பதக்கங்கள்., விலைமதிப்பற்ற கற்கள்., தங்க நாணயங்கள்., மாதிரி கழுத்தணிகள்., கல் பதித்த ஆபரணங்கள்., தங்கக் கவசங்கள்., தலைக்கவசங்கள்., முத்து நகைகளின் குவியல்கள்., வைரங்கள்., தங்கத் தாமரை., வெள்ளி பிஸ்கட்கள்., கருடவாகனத்திற்கான அலங்காரப் பொருட்கள்., பூஜைப் பொருட்கள் மற்றும் திருவிழா உபகரணங்கள் உள்ளன. ஆகையால் இப்பொழுது இந்த கோவில் உலகின் பணக்கார கோவில்களில் ஒன்றாக மாறக்கூடும். ’A’ அறையில் மட்டும் அதிக அளவு புதையல் கண்டுபிடிக்கப்பட்டது. ’F’ பெட்டகம் இதுவரை திறக்கப்படாத இறுதி பெட்டகம். அரச குடும்பம் அதனுடன் தொடர்புடைய ஒரு (மாய/மர்மான) சாபத்தைக் கொண்டுள்ளதாக நம்பப் படுகிறது.

“ஸ்ரீபலிபுரா”

ஸ்ரீபலிப்புரா என்பது கல்லால் கட்டப்பட்ட ஒரு செவ்வக நடைபாதையாகும். இது 10,000 தொழிலாளர்களையும் 100 க்கும் மேற்பட்ட யானைகளையும் கொண்டு ஆறு மாதங்களுக்குள் கட்டியதாக நம்பப்படுகிறது. ஸ்ரீபலிப்புராவை 365 தூண்கள் மற்றும் கால் பகுதி தூணும் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணும் ஒரு ஒற்றைக்கல் ஆகும். அவை ஆண்டின் நாட்களையும் தூணின்., கால் பகுதியும் ¼ நாளையும் குறிக்கின்றன. (வருடத்திற்கு 365¼ நாட்கள்)

"தங்க கொடி மரம்"

கொடிமரம் 80 அடி உயரமானது. இது ஆரம்பத்தில் தேக்கு மரத்தால் ஆனது. பின்னர் இது தங்கக் கொடிமரமாக மாற்றப்பட்டது. விஷ்ணுவை சுமந்து செல்லும் புனித பறவையான கருட சுவாமி கம்பத்தின் உச்சியில் வைக்கப்பட்டுள்ளது.

“சிக்கலான கோபுரம்”

கிரானைட்டால் ஆன 35 மீட்டர் உயரமான ஏழு அடுக்கு கோபுரம்., ஒவ்வொரு பார்வையாளர் மனதிலும் கோவிலின் காட்சியின் நினைவைப் பதிக்கிறது. கோபுரத்தில் விஷ்ணுவின் 10 அவதாரங்களும்., மேலே ஏழு தங்கக் கலசங்களும் பொருத்தப்பட்டுள்ளன. தரை தளத்தில் உள்ள திறப்பு., கோயிலுக்குள் நுழைய ஒரு பெரிய வாயிலைக் கொண்டுள்ளது.

“கலைநயமிக்க அற்புதம்”

இந்தக் கோவிலின் கட்டிடக்கலை., கிரானைட்டால் ஆன 35 மீட்டர் உயரமான ஏழு அடுக்கு கோபுரமாகும். கோபுரத்தில் விஷ்ணுவின் 10 அவதாரங்களும்., மேலே ஏழு தங்கக் கலசங்களும் வைக்கப் பட்டுள்ளன. தரை தளத்தில் உள்ள திறப்பு., கோயிலுக்குள் நுழைய ஒரு பிரமாண்டமான வாயிலைக் கொண்டுள்ளது. இக் கோவில் திராவிட மற்றும் கேரள பாணி கட்டிடக்கலை கலவை ஆகும். இது அதன் கட்டிடக்கலை அற்புதத்திற்கும் பெயர் பெற்றது. கலை., கட்டிடக்கலை., அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் கடந்த கால படைப்பின் சாதனை. தற்போதைய தரங்களுடன் ஒப்பிட முடியாது.

இந்தக் கோவில் தமிழ்நாட்டின் திருவட்டாறில் உள்ள ஆதி கேசவப் பெருமாள் பிரதிமையால் ஈர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இரண்டு கோயில்களிலும் உள்ள தெய்வம் அனந்தசயன நிலையிலேயே உள்ளது.

மற்றொரு அற்புதமான கட்டிடக்கலை வேலைப்பாடு., 28 தூண்களின் துணையுடன் கூடிய சப்தஸ்வர மண்டபம் ஆகும். நான்கு மூலைகளிலும் உள்ள தூண்கள் தட்டப்பட்டால் இசைக் குறிப்புகளை உருவாக்கும் என்றும் கூறப்படுகிறது..

“புனிதமான பத்மதீர்த்தம்”

திருவனந்தபுரம் நகரின் மிகப் பழமையான நீர்நிலைகளில் ஒன்றான பத்மதீர்த்தம்., கோவிலின் கோவில் குளமாகும். இந்தக் குளம் பல இந்து மத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீபலராமர் இந்தக் கோயிலுக்கு வருகை தந்து., பத்மதீர்த்தத்தில் நீராடி., பல பூஜைகளை செய்த்தாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

"அழகான சுவரோவியங்கள்"

பிரதான கருவறையின் வெளிப்புறச் சுவர்கள் சுவரோவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கருவறையின் பின்புறத்தில் உள்ள அனந்தசயனத்தின் 18 அடி நீள சுவரோவியம் கேரளாவின் கோயில் சுவரோவியங்களில் மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. இது தமிழ் பிறாமண சுவரோவியக் கலைஞர்களால் வரையப்பட்டது.

"திருவம்பாடி ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி கோயில்"

திருவம்பாடி ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்வாமி கோவில் பிரதான கோயில் சுவர்களுக்குள் இருந்தாலும்., தனித்தனி கொடி கம்பம்., புனித கற்கள் மற்றும் அதன் சொந்த சடங்குகளுடன் கூடிய தனி கோயிலின் அந்தஸ்தை அது பெற்றிக்கிறது. இது மிகவும் அசாதாரணமானது. பார்த்தசாரதி வடிவத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் இருப்பு இங்கே இயற்கையாகவே கவர்ச்சிகரமானது. கோவிலின் வெளிப்புறச் சுவர்கள் விளக்குகளால் முழுமையாக மூடப்பட்டிருக்கும். இது வில்லுக்கு மடம் என்றும் அழைக்கப்படுகிறது. மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம்., உச்சியில் கவர்ச்சிகரமான கஜ லட்சுமி கிரானைட்டில் செதுக்கப்பட்டுள்ளது.

“இந்த கோவிலின் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை விதிகள்”

1. ஆடை விதிகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் ஆண்கள் : கட்டாயமாக வேட்டி (வெள்ளை அல்லது காவி) அணிய வேண்டும். சட்டை., டிஷர்ட்., பனியன் (Shirt., TShirt) அணியக்கூடாது. மேல் சட்டை இல்லாமல் (BareBodied) அல்லது அங்கவஸ்திரம் அணிந்து செல்லலாம். பெண்கள் : பாரம்பரிய புடவை (Saree) அணிய வேண்டும். சுடிதார்., குர்தி, ஜீன்ஸ்., பேண்ட் மற்றும் பிற நவீன உடைகள் (Salwar kameez, Western Wear) கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள்: சிறுவர்கள் வேஷ்டி அணிய வேண்டும். பெண்கள் பாரம்பரிய பாவாடை/சட்டை (Long skirt and blouse) அணியலாம். பி.கு. வாடகை/கொள்முதல்: பாரம்பரிய உடை (வேஷ்டி., செட் வேஷ்டி அங்கவஸ்திரம்) கோவில் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள கடைகளில் வாடகைக்கு அல்லது விலை கொடுத்தும் வாங்கலாம். இல்லையெனில் நுழைவது தடைசெய்யப்பட்டுள்ளது.

2. நீங்கள் வெறுங்காலுடன்தான் கோயிலுக்குள் நுழைய வேண்டும்.

3. இந்துக்கள் மட்டுமே கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

4. கேஜெட்டுகள் {மின்னணுவியல் சாதனம்., சிறுகருவி அல்லது உபகரணம்} கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளன.

5. புகைப்படம் எடுக்கக் கூடாது., சிறு கேமரா., மொபைல் கேமரா., ஸ்மார்ட் வாட்ச்., தோல்/துணி பெல்ட் பை (Pouch) ஆகியவற்றிக்கு அனுமதி கிடையாது.

6. கோயிலின் மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சுவாரஸ்யமான பகுதிகளையும் ஆராய கோயிலுக்குள் ஒரு மணி நேரம் செலவிட முயற்சிக்கவும்.

7. கோயிலின் உள்ளே உள்ள தூண்களிலிருந்து (கடல்) அலைகளின் சத்தத்தைக் கேட்கலாம்.

8. பிரதான கருவறை மங்கலாக ஒளிரும்., சிலை அடர் கருப்பு நிறத்தில் இருப்பதால் சிலையின் விவரங்களைக் காண நீங்கள் நெருக்கமாகப் பார்க்க வேண்டும்.

9. அமைதியான தரிசனத்தைப் பெற அதிகாலையில் வருகை தாருங்கள்.

**-எம்.அசோக்ராஜா**
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

# தினம் ஒரு தலைவர்கள் — குட்டிமாலு வரலாறு

குட்டிமாலு ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சுதேசி பிரச்சாரகர், இந்திய தேசிய காங்கிரஸின் தீவிர உறுப்பினர், சுதந்திரத்திற்கு முன்பு இரண்டு முறை சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார், மற்றும் அயராத சமூக சேவகர். கூட்டநாட்டில் உள்ள அனக்கார வடக்கத் மாளிகையைச் சேர்ந்தவர், இது அம்மு சுவாமிநாதன், ஜனனேவின் கேப்டன் லட்சுமி, நடனக்









கலைஞர் மிருணாளினி சாராபாய் மற்றும் முன்னாள் மக்களவை உறுப்பினர் சுபாஷினி அலி உள்ளிட்ட பல பிரபலமான பெண் சுதந்திரப் போராளிகள் மற்றும் சமூகப் பணியாளர்களை உருவாக்கியுள்ளது. அவரது கணவர் கோழிபுரத்து மாதவ மேனன், கேரள பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவராகவும், சென்னை மாநிலத்தில் அமைச்சராகவும் இருந்தார்.

1930 ஆம் ஆண்டில், வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு எதிராக காதி அல்லது கைத்தறி துணியை ஊக்குவிக்கும் இயக்கத்தில் பங்கேற்க குட்டிமாலு தன்னார்வத் தொண்டு செய்தார். அடுத்த ஆண்டு கோழிக்கோடு நகரில் வெளிநாட்டு துணிகளை விற்கும் கடைகளை அவர் மறியல் செய்தார். 1932 ஆம் ஆண்டில், ஒத்துழையாமை இயக்கத்தின் போது, தனது இரண்டு மாத மகளை கைகளில் ஏந்தி, பெண்கள் அணிவகுப்பில் அணிவகுத்துச் சென்றார். சட்டவிரோத பொதுக் கூட்டத்திற்காக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். கோழிக்கோடு நீதிமன்றத்தில் பிரிட்டிஷ் மாஜிஸ்திரேட் முன் ஆஜரானார், அங்கு அவர் தனது குழந்தையை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டார், ஆனால் குட்டிமாலு தனது மகளை விட்டு வெளியேற அனுமதிக்க மறுத்து, தனது வாதங்களை ஆதரிக்க சட்டங்களை மேற்கோள் காட்டினார். இறுதியாக, 1934 வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், நீதிமன்றம் குழந்தையை தன்னுடன் இருக்க அனுமதிக்க வேண்டியிருந்தது.

1936 ஆம் ஆண்டு அவர் சென்னை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் 1940 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சத்தியாக்கிரகத்தின் போது கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையான சில மாதங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும் 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார், மேலும் தமிழ்நாட்டின் அமராவதி சிறையில் இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையானதும், 1944 இல் அவர் கேரள பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அகில இந்திய காங்கிரஸ் குழு மற்றும் காங்கிரஸ் செயற்குழுவில் பணியாற்றினார். அவர் கோழிக்கோடு நகராட்சியிலும் பணியாற்றினார். 1946 ஆம் ஆண்டு அவர் மீண்டும் சென்னை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை மறுவாழ்வு செய்வதற்காக மாதிரி அனாதை இல்லங்களை அமைப்பதற்கான அவரது முயற்சிகளுக்காக அவர் நினைவுகூரப்படுகிறார். அவரது பணிகளை எம். கே. காந்தி, ஜவஹர்லால் நேரு மற்றும் சி. ராஜகோபாலாச்சாரி ஆகியோர் மிகவும் பாராட்டினர்.

மார்ச் 2007 இல், கூட்டநாட்டில் அவரது நினைவாக ஒரு வருட கொண்டாட்ட நிகழ்ச்சி தொடங்கப்பட்டது, மேலும் 2008 ஆம் ஆண்டில் கேரள அரசு மெலிலா ராஜசேகர் இயக்கிய அவரது வாழ்க்கை குறித்த ஆவணப்படத்தை இயக்கியது.

## வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வழியாக கடந்த 5 ஆண்டுகளில் ஒருவர்கூட அரசுப் பணியில் சேரவில்லை

**ஜெய்ப்பூர், மார்ச் 19:**

ராஜஸ்தானில் கடந்த ஐந்தாண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வழியாக ஒருவர்கூட அரசுப் பணியில் அமர்த்தப்படவில்லை என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

வேலைவாய்ப்பு இயக்குநரகம் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த ஜன. 14 வரை மொத்தம் 22,21,317 விண்ணப்பதாரர்கள் வேலை தேடி அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருக்கின்றனர். அவர்களில் 13.08 லட்சம் ஆண்கள், 9.12 லட்சம் பெண்கள். 989 பேர் இதர பிரிவினர். அவர்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் (ஓபிசி) சேர்ந்தவர்களே அதிகம். ராஜஸ்தானைப் பொருத்தவரையில் அதிகபட்சமாக ஜெய்ப்பூரில் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்து காத்திருப்பவர்கள் அதிகம். அங்கு மொத்தம் 2.51 லட்சம் பேர் வேலைக்காகக் காத்திருக்கின்றனர். மேலும், கடந்த ஐந்தாண்டுகளில் தனியார்துறையிலும் குறைந்த எண்ணிக்கையிலே பணி நியமனம் நடைபெற்றுள்ளது.

கடந்த 2021-இல் 86 பேரும், 2022-இல் 825 பேரும், 2023-இல் மூன்றே பேரும், 2024-இல் 23 பேரும், கடந்தாண்டில் 71 பேரும் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வழியாக நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் இதர முன்னெடுப்புகள் வழியாக தனியார் துறையில் பணிகளில் சேர்ந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘புவன்’ என்ற புதிய செயலியை அறிமுகம் செய்தது இஸ்ரோ

**புதுடெல்லி, மார்ச் 19:**




சுற்றுலாவை மேம்படுத்தவும். இந்தியா முழுவதும் உள்ள பாரம்பரிய மற்றும் கலாசார தலங்களை கண்காணித்து பாதுகாப்பதற்காக, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ’புவன்’ என்ற பெயரில் புவி இடம் சார்ந்த இணையதளம் மற்றும் செல்போன் செயலியை உருவாக்கி உள்ளது. இந்த செயலி மூலம் 2 தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

பார்வையாளர்கள், ’ஸ்பேஷியல்’ டெக்னாலஜிஸ் (கஸ்தூரி) மற்றும் பாரத் தர்ஷன் செயலிகள் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அறிவுத்தளத்தை அணுகலாம். தேசிய தொலை உணர்வு மையம், தேசிய மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனம், கலாசார அமைச்சகம் மற்றும் இஸ்ரோ ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்களால், பல்வேறு மாநில அரசு இணையதளங்கள், ஆய்வு கட்டுரைகள் மற்றும் தொடர்புடைய மூலங்களில் இருந்து பெறப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களை பயன்படுத்தி இந்தச் செயலிகள் உருவாக்கப்பட்டன.

தற்போது, ’பாரத் தர்ஷன்’ செயலியானது யுனெஸ்கோவால் பாதுகாக்கப்பட்ட 42 இடங்கள் குறித்த தகவல்களை வழங்குகிறது.

அதே நேரத்தில் கஸ்தூரி செயலியானது 20 கலாசார மற்றும் பாரம்பரிய நிலப்பரப்புகள் குறித்த விவரங்களை கொண்டுள்ளது. வரும் நாட்களில் மேலும் பல தளங்கள் சேர்க்கப்பட உள்ளது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

## டிஜிட்டல் கைது: மூதாட்டியை மிரட்டி ரூ.38 லட்சம் மோசடி

**பெங்களூரு, மார்ச் 19:**

பெங்களூருவை சேர்ந்த கீதா(வயது 67) என்ற மூதாட்டி, டிஜிட்டல் கைது மோசடி கும்பலிடம் ரூ.38 லட்சம் பணத்தை இழந்துள்ளார். அவருக்கு அறிமுகம் இல்லாத செல்போன் எண்ணில் இருந்து ஒரு அழைப்பு வந்துள்ளது. அதில் பேசியவர்கள், தங்களை மும்பை காவல்துறை அதிகாரிகள் என்று கூறியுள்ளனர். பின்னர் அவர்கள் மூதாட்டியின் வங்கி கணக்கில் இருந்து பயங்கரவாதிகளுக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இதனால் பயந்து போன மூதாட்டி கீதா, தனக்கு இதில் எந்த சம்பந்தமும் இல்லை என கூறியுள்ளார். ஆனால் அந்த நபர்கள், கீதாவை டிஜிட்டல் கைது செய்திருப்பதாகவும், விசாரணை முடியும் வரை யாரையும் தொடர்பு கொண்டு பேசக் கூடாது என்றும் கூறி மிரட்டியுள்ளனர். பின்னர், இந்த வழக்கில் இருந்து விடுபட வேண்டும் என்றால், வங்கி கணக்கில் உள்ள பணத்தை தங்களுக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என்றும், விசாரணை முடிந்ததும் 2 நாட்களில் பணத்தை திருப்பி அனுப்பி விடுவோம் என்றும் கூறியுள்ளனர். வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக கீதா தனது வங்கி கணக்கில் இருந்த ரூ.38 லட்சத்தை அனுப்பி வைத்துள்ளார். அதன் பிறகு மோசடிக்காரர்கள் கீதாவை தொடர்பு கொள்ளவில்லை. நாட்கள் கடந்தும் தனக்கு பணம் திருப்பி வராததால் சந்தேகமடைந்த கீதா, இந்த விவகாரம் குறித்து தனக்கு தெரிந்தவர்களிடம் விசாரித்தபோது, இது ஒரு மோசடி என்பது தெரியவந்ததுள்ளது. இதனால் அதிர்ந்து போன மூதாட்டி கீதா, உடனடியாக பெங்களூரு சென் போலீஸ் நிலையத்துக்கு சென்று நடந்ததை கூறி புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மோசடி செய்த மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

## எரிபொருள் விநியோகம் சீராகிறது! பதுக்கப்பட்ட 15,000 சிலிண்டர்கள் பறிமுதல்!

**புதுடெல்லி, மார்ச் 19:**



சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் சீராகி வருவதாக மத்திய அரசு செவ்வாய்க்கிழமை விளக்கம் அளித்துள்ளது.

மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக வளைகுடா நாடுகளில் இருந்து எரிபொருள் இறக்குமதி கடுமையாக பாதிக்கப்பட்ட நிலையில், நாட்டில் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, சிலிண்டர், பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள் பதுக்குவதை தடுக்கும் வகையில், அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை (எஸ்மா) மத்திய அரசு அமல்படுத்தியது.

தற்போது ஹோர்முஸ் நீரிணை வழியாக இந்திய கொடியேந்திய கப்பல்களுக்கு ஈரான் அனுமதி அளித்ததை தொடர்ந்து, இரண்டு எரிவாயு டேங்கர் கப்பல்கள் இந்திய துறைமுகம் வந்தடைந்துள்ளது.

இந்த நிலையில், மத்திய வெளியுறவு, பெட்ரோலியம் மற்றும் எரிபொருள், கடல் போக்குவரத்து உள்ளிட்ட அமைச்சகத்தின் அதிகாரிகள் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து இன்று விளக்கம் அளித்தனர். அவர்கள் தெரிவித்ததாவது:

”பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவு நம்மிடம் கையிருப்பில் உள்ளன. கடந்த சில நாள்களில் மட்டும் சிலிண்டரை பதுக்கி வைப்பவர்களை கண்காணிக்க 12,000 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில், 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தில்லியில் நேற்று மட்டும் 600 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. உத்தரப் பிரதேசம், கேரளம், ஜம்மு - காஷ்மீர் உள்ளிட்ட பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டு கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கரூர் கூட்ட நெரிசல் வழக்கு: செந்தில் பாலாஜியிடம் 6 மணிநேரமாக நடைபெற்ற சிபிஐ விசாரணை நிறைவு

**புதுடெல்லி, மார்ச் 19:**

கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27 அன்று தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தேசிய அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு விசாரணைக்காக தவெக தலைவர் விஜய் டெல்லியில் சிபிஐ தலைமை அலுவலகத்தில் 3 முறை ஆஜராகியுள்ளார். அந்த வகையில் நேற்று முன் தினம் சிபிஐ அலுவலகத்தில் விஜய் ஆஜரானார். அவரிடம் விசாரணை நடைபெற்றது.

இதனிடையே, கரூர் கூட்ட நெரிசல் வழக்கில் திமுக கரூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செந்தில் பாலாஜிக்கும் சிபிஐ நோட்டீஸ் அனுப்பியது. வழக்கு விசாரணைக்கு 17ம் தேதி (இன்று) நேரில் ஆஜராகும்படி செந்தில் பாலாஜிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. இதையடுத்து, கரூர் கூட்ட நெரிசல் வழக்கு விசாரணைக்காக செந்தில் பாலாஜி நேற்று சென்னையில் இருந்து டெல்லி புறப்பட்டு சென்றார்.

இந்நிலையில், டெல்லி சென்ற செந்தில் பாலாஜி இன்று காலை 11 மணிக்கு சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் 11 மணிக்கு தொடங்கி தொடர்ந்து 6 மணிநேரமாக விசாரணை நடைபெற்றது. கரூர் கூட்ட நெரிசல் தொடர்பாக செந்தில் பாலாஜி மீது தவெக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. மேலும், இந்த குற்றசாட்டுகள் தொடர்பாக செந்தில் பாலாஜி மீது சிபிஐ இடம் தவெக புகார் மனுவும் அளித்தது. இந்த புகார் தொடர்பாக செந்தில் பாலாஜியிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

தவெக தலைவர் விஜய், நிர்வாகிகள் நிர்மல் குமார், ஆதவ் அர்ஜுனா ஆகியோர் அளித்த வாக்குமூலம் அடிப்படையில் செந்தில் பாலாஜியிடம் விசாரணை நடைபெற்றது. தவெக கூட்டத்திற்கு வழங்கப்பட்ட தண்ணீர் பாட்டில்களில் செந்தில் பாலாஜியின் அறக்கட்டளை குறித்த அடையாளங்கள் எவ்வாறு இடம்பெற்றது? கரூர் கூட்ட நெரிசல் நடந்ததும் உடனடியாக மருத்துவமனைக்கு சென்றது எப்படி? உள்பட பல்வேறு கேள்விகளை செந்தில் பாலாஜியிடம் சிபிஐ அதிகாரிகள் எழுப்பினர். இந்த கேள்விகளுக்கு செந்தில் பாலாஜி பதில் அளித்தார். இதையடுத்து 6 மணிநேரமாக நடந்த சிபிஐ விசாரணை தற்போது நிறைவடைந்துள்ளது.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜியை மீண்டும் விசாரணைக்கு அழைக்க சிபிஐ அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## உடல் எடை குறைப்பு சிகிச்சை: மேலும் 3 மருந்துகளுக்கு அனுமதி!

**புதுடெல்லி, மார்ச் 19:**

உடல் எடை குறைப்பு சிகிச்சையில் மேலும் 3 மருந்துகளைப் பயன்படுத்த மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பால் (சி.டி.எஸ்.சி.ஓ.) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

‘ஆர்லிஸ்டாட் (ORLISTAT)’, ‘டிர்ஸெபாடைட் (TIRZEPATIDE)’, ‘செமக்லூடைட் (SEMAGLUTIDE)’ ஆகிய மூன்று மருந்துகளை மருத்துவர்களின் பரிந்துரையின்பேரில் மட்டும் பயன்படுத்தவும் அவற்றை சில்லறை வணிகத்தில் விற்கவும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் அனுபிரியா படேல் செவ்வாய்க்கிழமை(மார்ச் 17) தெரிவித்தார். மாநிலங்களவையில் கேள்வியொன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், ஆஸெம்பிக் (OZEMPIC) மற்றும் மௌஞ்ஜாரோ (MOUNJARO) ஆகிய இரு மருந்துகளும் உடல் எடை குறைப்பு சிகிச்சையில் பரவலாகப் பயன்படுத்தப்படும் மருந்துகள் என்று குறிப்பிட்ட அவர், ஸ்டீராய்டுகளை மருத்துவப் பரிந்துரையின்றி தன்னிச்சையாகப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் அவற்றின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், ‘சிறப்பு மருத்துவ பயன்பாட்டுக்கான உணவு’ என்ற பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள ஊட்டச்சத்து மருந்துகள் போன்றவற்றை விற்கும்போது, அந்தப் பொருள்களில் கண் பார்வைக்கு தெளிவாகத் தெரியும்படி ‘மருத்துவப் பரிந்துரையின்பேரில் மட்டுமே இதனைப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது’ என்பதை பதிவிடுவதும் அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

## கேரளம் சட்டமன்ற தேர்தலில் களம் இறங்கும் நடிகைகள்..!

**திருவனந்தபுரம், மார்ச் 19:**

கேரளம் மாநிலத்தில் ஏப்ரல் 9-ந் தேதி சட்டமன்ற தேர்தல் நடக்கிறது. பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் டுவெண்டி-20 கட்சி சமீபத்தில் இணைந்தது.

கடந்த 2021-ம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலில் டுவெண்டி-20 கட்சி தனித்து போட்டியிட்டதோடு, 8 தொகுதிகளில் களம் இறங்கியது. இந்த முறை பா.ஜனதா கூட்டணியில் இணைந்து தேர்தலை சந்திக்கிறது. அந்த கட்சிக்கு 20 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் டுவெண்டி-20 கட்சி யின் 4-வது வேட்பாளர்கள் பட்டியலை கட்சி தலைவர் சாபு ஜேக்கப் நேற்று கொச்சியில் வெளியிட்டார். அங்கமாலி, திருப்புனித்துரா. பெரும்பாவூர், ஏட்டுமானூர் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டு உள்ளனர்.

பெரும்பாவூர் சட்டமன்ற தொகுதியில் நடிகை லட்சுமி பிரியா போட்டியிடுகிறார். இவர் கடந்த 2005-ம் ஆண்டு முதல் மலையாள திரைப்படங்களில் நடித்து வருகிறார். திருப்புனித்துரா தொகுதியில் நடிகை அஞ்சலி நாயர் களம் இறங்குகிறார். அவர் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர்களில் நடித்து உள்ளார்.

ஏட்டுமானூர் தொகுதியில் நடிகை வீணா நாயர் போட்டியிடுகிறார். இவர் மலையாள திரைப்படங்களில் நடித்து உள்ளார். நடன கலைஞர் ஆவார். அங்கமாலி தொகுதியில் பிரோமி குரியாகோஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு உள்ளார். அவர் வணிக மேலாண்மை ஆலோசகராக இருந்து வருகிறார். திருக்காக்கரா தொகுதியில் பிரபல திரைப்பட இயக்குனர் அகில் மாரர், திருவம்பாடி தொகுதியில் சன்னி தாமஸ், குன்னத்து நாடு தொகுதியில் பாபு திவாகரன், திருக்கரிப்பூர் தொகுதியில் ரவி குளங்கரா போட்டியிடுகின்றனர்.

## 46,500 டன் சமையல் எரிவாயுவுடன் குஜராத் வந்தடைந்த இரண்டாவது கப்பல்



**புதுடெல்லி, மார்ச் 19:**

மேற்காசிய போர் நிலவரம் காரணமாக ஹோர்முஸ் நீரிணையில் 46,500 மெட்ரிக் டன் சமையல் (எல்பிஜி) எரிவாயுவுடன் சிக்கியிருந்த ‘நந்தா தேவி’ என்ற இரண்டாவது கப்பல் பாதுகாப்பாக குஜராத்தின் வடினார் துறைமுகத்துக்கு செவ்வாய்க்கிழமை பாதுகாப்பாக வந்து சேர்ந்தது.

முன்னதாக, ‘ஷிவாலிக்’ என்ற கப்பல் எல்பிஜி ஏற்றிக்கொண்டு ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து குஜராத்தின்

இதுகுறித்து தீன்தயாள் துறைமுக ஆணைய தலைவர் சுசீல்குமார் சிங் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நந்த தேவி கப்பல் 46,500 மெட்ரிக் டன் எல்பிஜியுடன் (திரவ பெட்ரோலியம் எரிவாயு) வடினார் துறைமுகத்துக்கு வந்துள்ளது. இந்த எரிவாயு முதலில் பி.டபிள்யு. பிரிச் என்ற கப்பலுக்கு மாற்றப்பட்டு, பின்னர் தமிழகத்தின் சென்னை எண்ணூர் துறைமுகத்துக்கும், மேற்கு வங்கத்தின் ஹால்தியா துறைமுகத்துக்கும் அனுப்பிவைக்கப்படும். மணிக்கு 1,000 டன் என்ற வீதத்தில் இந்தப் பரிமாற்றம் நடைபெறும். இந்த எரிவாயு பரிமாற்றத்தை முழுமையாக நிறைவு செய்ய 2 நாள்கள் ஆகும்.

இந்த சமையல் எரிவாயு, மத்திய அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி முன்னுரிமை அடிப்படையில் பரிமாற்றம் மற்றும் விநியோகம் செய்யப்படும். இந்த ஒட்டுமொத்த நடைமுறைகளும் பன்முக முகமைகளால் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்றார்.

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப் படைகளின் தாக்குதலைத் தொடர்ந்து பாரசீக வளைகுடா பகுதியிலிருந்து வெளியுலகுக்கான சரக்கு கப்பல்களின் முக்கிய வழித்தடமான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.

மேலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு பொருள்கள் மற்றும் கச்சா எண்ணெய்யை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகிறது. மற்ற நாடுகளின் கப்பல்கள் இந்த நீரிணையைக் கடக்க ஈரானின் ஒப்புதலைப் பெற வேண்டும் என அறிவுறுத்தியது. இதனிடையே, தாக்குதல் காரணமாக, இந்தியாவுக்கான முக்கிய இயற்கை எரிவாயு ஏற்றுமதியாளரான கத்தார், அதன் உற்பத்தியை முழுமையாக நிறுத்தியது. இதனால், இந்தியாவில் சமையல் எரிவாயு விநியோகத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், சமையல் எரிவாயு விநியோகத்துக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்தது. ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டதால், இந்திய கொடி பொருத்திய 28 சரக்கு கப்பல்களும் மேற்கொண்டு செல்ல முடியாமல் ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் சிக்கின.

## முத்ரா திட்டத்தின் கீழ் ரூ.39½ லட்சம் கோடி கடன் உதவி: நிர்மலா சீதாராமன்

**புதுடெல்லி, மார்ச் 19:**

பிரதமரின் முத்ராயோஜனா திட்டம் குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பதிலளித்து கூறியதாவது:-

பிரதமரின் முத்ரா யோஜனா திட்டம் ஏராளமான சிறுதொழில்முனைவோருக்கு பயனளித்துள்ளது. இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து இதுவரை ரூ.39.48 லட்சம் கோடி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.


இது வங்கி கடன் வழங்கும் திட்டங்களில் முக்கியமான ஒன்றாகும். பிணையாக வழங்குவதற்கு எந்த சொத்தும் இல்லாத மக்களையும் இத்திட்டம் சென்றடைந்துள்ளது.

முத்ரா திட்டத்தில் ’சிசு’, ’கிஷோர்’ மற்றும் ’தருண்’ என மூன்று பிரிவுகள் உள்ளன. ’சிசு’ பிரிவில் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் 12.4 சதவீதம் நிலுவையில் உள்ளது. ’கிஷோர்’ பிரிவில் 9.48 சதவீதமும், ’தருண்’ பிரிவில் வழங்கப்பட்ட மொத்த தொகையில் 7.92 சதவீதமும் நிலுவையில் உள்ளன.

இந்த நிலுவை கடன்களை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளில் வங்கிகள் ஈடுபட்டு வருகின்றன. பிரிவு வாரியாக பார்க்கும்போது, வராக்கடன் விகிதமானது ’சிசு’ பிரிவில் மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மொத்த தொகையில் இது வெறும் 1.83 சதவீதம் மட்டுமே வராக்கடன் இருக்கிறது. தங்கள் தொழிலை வளர்ப்பதற்காக சிறிய அளவிலான கடன்களை பெறும் மக்களுக்கு ’சிசு’ பிரிவின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் மொத்த வராக்கடன்கள், மொத்த கடன் தொகையில் சுமார் 2 சதவீதமாக மட்டுமே உள்ளன. எனவே, வராக்கடன்கள் மிக அதிக அளவில் குவிந்துவிட்டன என்றோ அல்லது அவை பரவலாக பெருகிவிட்டன என்றோ சொல்ல முடியாது.

வராக்கடன்களை வசூலிக்க வங்கிகள் எடுத்துள்ள நடவடிக்கைகளில், தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல், வாடிக்கையாளர்களுடனான தொடர்பை அதிகப்படுத்துதல், தவணைகளை மறுசீரமைத்தல் மற்றும் ‘ஒருமுறை தீர்வு திட்டம்’ ஆகியன அடங்கும். முத்ரா திட்டத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## மேற்காசிய பதற்றம்: சர்வதேச நோயாளிகள் வருகை 30% சரிவு!



**புதுடெல்லி, மார்ச் 19:**

மேற்காசிய பதற்றமான சூழல், டில்லி மற்றும் அதன் சுற்றுவட்டார என்சிஆர் பகுதியில் மருத்துவத் துறையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த பிப். 28முதல் தொடங்கிய ஈரான் மீதான அமெரிக்கா, இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்கள் மற்றும் அதற்கு ஈரான் படைகளின் எதிர்வினை ஆகியவற்றால் மேற்காசிய பிராந்தியத்தில் பெரும்பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால், அப்பகுதிகளுக்கான விமான சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாக, மேற்காசிய பிராந்தியத்திலிருந்து இந்தியாவுக்கு வருகை தரும் நோயாளிகள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.

இங்குள்ள நவீன மருத்துவ சுகாதார கட்டமைப்பு மற்றும் நிபுணத்துவம் காரணமாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான நோயாளிகள் பல்வேறு சிகிச்சைகளுக்காக தில்லிக்கு வருகின்றனர். இந்திய மருத்துவ சுகாதார சேவைகளுக்கான மிகப்பெரிய சந்தையாகச், சுமார் 30 – 40 சதவீதம் சர்வதேச மருத்துவ பயணிகளுடன் மேற்காசியா முதன்மையாகத் திகழ்கிறது.

இந்நிலையில், அண்மைக் காலமாக இராக், ஓமன், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அதன் அண்டை நாடுகளிலிருந்து சிகிச்சைகளுக்கு வரும் நோயாளிகள் விகிதம் குறைந்துள்ளது. அவ்வகையில் கணக்கிட்டால், கடந்த மாதக் கடைசி 10 நாள்களில் பதிவான சர்வதேச நோயாளிகள் வருகையுடன் இம்மாத முதல் 10 நாள்கள் வருகையை ஒப்பிட்டால், மேற்காசியாவிலிருந்து வரும் நோயாளிகள் விகிதம் 75 சதவீதம் சரிவடைந்துள்ளது என்று இது குறித்த தகவலறிந்த மருத்துவர்கள் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்தனர்.




# அதிவேகமாக ஓட்டிய கார் மோதியதில் ஆட்டோ ஓட்டுநர் உயிரிழப்பு: தொழிலதிபர் கைது



**சென்னை, மார்ச்.19:** கார் மோதிய விபத்தில், ஆட்டோ ஓட்டுநர் உயிரிழந்த விவகாரத்தில் தொழிலதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். வடபழனி நெற்குன்றம் பாதையில் கடந்த 14-ம் தேதி ஆட்டோ சென்று கொண்டிருந்தது.

அப்போது, அந்த வழியாக வேகமாக வந்த கார் அந்த ஆட்டோ மீது மோதி நிற்காமல் சென்றது. இதில், பலத்த காயமடைந்த ஆட்டோ ஓட்டுநர் சாலிகிராமத்தைச் சேர்ந்த பாஸ்கர் (58) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்து தொடர்பாக பாண்டி பஜார் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

சிசிடிவி கேமரா காட்சிகள்

முதல்கட்டமாக சிசிடிவி கேமரா காட்சிகள் அடிப்படையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

இதில், விபத்தை ஏற்படுத்தி நிற்காமல் சென்ற காரை ஓட்டியது சென்னை சாலிகிராமத்தைச் சேர்ந்த நிஷாந்த் (29) என்பதும், நண்பர்களை உற்சாகப்படுத்த சாலையில் அபாயகரமான முறையில் காரை ஓட்டியபோது, கட்டுப்பாட்டை இழந்து ஆட்டோ மீது மோதியதாகவும், விபத்தில் சிக்கியவருக்கு அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டதைக் கண்டு பயந்து அங்கிருந்து தப்பி ஓடியதாகவும் போலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, அவரை போலீஸார் கைது செய்தனர். பின்னர், அவரை நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர். காவல் ஆணையர் எச்சரிக்கை மது அருந்திவிட்டு அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் வாகனம் ஓட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை காவல் ஆணையர் அருண் எச்சரித்துள்ளார்.

இது ஒருபுறம் இருக்க கைது செய்யப்பட்ட நிஷாந்த் மீது கொலைக்கு நிகரான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

# சவ ஊர்வலத்தில் நடனமாடுவதில் மோதல்: உணவு டெலிவரி நிறுவன ஊழியரை தாக்கிய 2 பேர் கைது



**சென்னை, மார்ச்.19:** ராயப்பேட்டை, ரோட்டரி நகர் 15-வது தெருவைச் சேர்ந்தவர் ஜீவா (31). தனியார் உணவு டெலிவரி நிறுவனத்தில் ஊழியராக வேலை செய்து வருகிறார்.

கடந்த 15-ம் தேதி, இவரது வீட்டருகே வசித்து வந்த பெண் உறவினர் ஒருவர் இறந்துவிட்டார். மாலையில் அவரது இறுதி ஊர்வலம் நடைபெற்றது. அதில், பங்கேற்று ஜீவா நடனமாடினார்.

மேலும், சிலரும் ஆடினர்.அப்போது, இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து உறவினர்கள் இரு தரப்பையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.

சிறிது நேரத்துக்கு பிறகு ஜீவா அதே பகுதியில் உள்ள ஆர்.கே. சாலை, பறக்கும் ரயில் நிலைய பாலம் அருகேயுள்ள டீக்கடையில் அமர்ந்திருந்தார்.

அப்போது, அங்கு பைக்கில் வந்த 2 பேர், சவ ஊர்வல தகராறை சுட்டிக்காட்டி கம்பியால் தாக்கி விட்டு தப்பினர்.

இதில், காயம் அடைந்த ஜீவா சிகிச்சைக்கு பின்னர், ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

இதில், தாக்குதல் நடத்தி விட்டு தப்பியது திருவல்லிக்கேணி, ரோட்டரி நகரைச் சேர்ந்த மணிகண்டன் (25), அதே பகுதியைச் சேர்ந்த ஆனந்த் (30) என்பது தெரிந்தது.

இதையடுத்து, தலைமறைவாக இருந்த இருவரையும் போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# மெரினா, அண்ணாசாலை உள்ளிட்ட பகுதிகளில் பைக் ரேஸில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு அபராதம்

**சென்னை, மார்ச்.19:** சென்னையில் பல்வேறு முக்கிய சாலைகளில் பைக் ரேஸில் ஈடுபட்ட 27 வாகனங்களை போக்குவரத்து போலீஸார் பறிமுதல் செய்தனர்.

சென்னையில் இளைஞர்கள் அவ்வப்போது பைஸ் ரேஸில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை அடையாளம் கண்டு போலீஸார் கைது செய்கின்றனர். மேலும் வாகனமும் பறிமுதல் செய்யப்படுகிறது.

பைக் ரேஸை தடுக்கும் வகையில் போக்குவரத்து போலீஸார் சென்னையின் பிரதான சாலைகளில் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

அவர்களின் கண்காணிப்பையும் மீறி நேற்று முன்தினம் இரவு மெரினா கடற்கரை சாலை, அண்ணா சாலை, வாலாஜா சாலை, பெரம்பூர் மேம்பாலம் உட்பட மேலும் சில சாலைகளில் இளைஞர்கள் பைக் ரேஸில் ஈடுபட்டனர்.

மேலும் பைக்குகளில் சாகசத்திலும் ஈடுபட்டனர். இதனால் அந்த வழியாகச் சென்ற வாகன ஓட்டிகள் அச்சத்துக்கு உள்ளாகினர். இந்த பைக் ரேஸ் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலானது.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க சென்னை போக்குவரத்து காவல் கூடுதல் ஆணையர் கார்த்திகேயன் உத்தரவிட்டார். அதன்படி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு போலீஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். முதல் கட்டமாக பைக் ரேஸ் மற்றும் சாகசத்தில் ஈடுபட்ட 27 பைக்குகளை பறிமுதல் செய்தனர்.

இந்த வாகனங்களை ஓட்டி வந்தவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ததோடு, அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருவதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# கோயில் நிலத்துக்கு குத்தகை வாடகை பாக்கி ரூ.9.74 கோடியை செலுத்த மறுத்து அம்ருதாஞ்சன் நிறுவனம் தாக்கல் செய்த மனு தள்ளுபடி



**சென்னை, மார்ச்.19:** கபாலீஸ்வரர் கோயில் நிலத்துக்கான குத்தகை வாடகை பாக்கி ரூ.9.74 கோடியை செலுத்த மறுத்து அம்ருதாஞ்சன் நிறுவனம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலை பகுதியில் கபாலீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 14 கிரவுண்ட் நிலத்தை தலைவலி நிவாரண தைலம் தயாரிப்பில் பிரபலமான அம்ருதாஞ்சன் நிறுவனம் கடந்த 1901-ல் மாதம் ரூ.1400 என்ற வாடகை அடிப்படையில் 99 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் பெற்றிருந்தது.

இந்த குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் இந்த மாத வாடகையை அறநிலையத் துறை ரூ.3.3 லட்சமாக நிர்ணயம் செய்து கடந்த 2001-ல் உத்தரவிட்டது. இதை எதிர்த்து அம்ருதாஞ்சன் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2005-ல் வழக்கு தொடர்ந்தது.

அந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி கடந்தாண்டு பிறப்பித்த உத்தரவில், "அந்த நிறுவனம் செலுத்த வேண்டிய வாடகை பாக்கியை வசூலிக்க அறநிலையத் துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என உத்தரவிட்டார்.

இதை எதிர்த்து அம்ருதாஞ்சன் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது அறநிலையத் துறை தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ஆர்.ஆர். அருண் நடராஜன் ஆஜராகி, "மனுதாரர் நிறுவனத்திடமிருந்து 2018-ம் ஆண்டு கோயில் நிலம் மீட்கப்பட்டுவிட்டது. கடந்த 2018-ம் ஆண்டு வரை அந்த நிறுவனம் வாடகை பாக்கியாக ரூ.9.74 கோடி நிலுவை வைத்துள்ளது" என வாதிட்டார். அதையடுத்து நீதிபதிகள், "இந்த வழக்கு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்துள்ளது. கோயில் நிலத்தை குத்தகைக்கு எடுத்த நபர், அந்த நிலத்தை மனுதாரர் நிறுவனத்துக்கு குத்தகை மாற்றம் செய்துள்ளார்.

அதன் படி அந்த நிறுவனம் வாடகையை முறையாக செலுத்தவில்லை என்பதால்தான் தனி நீதிபதி அந்த தொகையை வசூலிக்க உத்தரவிட்டுள்ளார். கோயிலில் அன்றாடம் நடைபெறும் பூஜைகள் மற்றும் மத ரீதியிலான சடங்குகளை நிகழ்த்த கோயில் நிர்வாகங்கள் இதுபோன்ற குத்தகை வாடகை வருமானத்தையே நம்பியுள்ளன.

எனவே தனி நீதிபதியின் உத்தரவை நாங்களும் உறுதி செய்கிறோம்" எனக்கூறி அம்ருதாஞ்சன் நிறுவனத்தின் மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

# வெயிலின் தாக்கத்தால் அனைத்து மருத்துவமனைகளிலும் உப்பு, சர்க்கரை கரைசல் விநியோக வசதிகளை ஏற்படுத்த அறிவுறுத்தல்



**சென்னை, மார்ச்.19:** தமிழகத்தில் வெயில் அதிகரித்து வருவதால்,இயல்பை விட அதிகமான வெப்பநிலை பதிவாகும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதனால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரத் துறையினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: உப்பு சர்க்கரை கரைசல் (ஓஆர்எஸ்) பாக்கெட்டுகளை போதிய கொள்முதல் செய்ய வேண்டும். அத்தியாவசிய மருந்துகள், ரத்த நாளங்கள் வழியே செலுத்தப்படும் திரவ மருந்துகளும் கையிருப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஹீட் ஸ்ட்ரோக் எனப்படும் வெப்ப வாத பாதிப்புக்குள்ளானவர்களுக்கு மருத்துவ வழிகாட்டுதல்களின்படி துரித சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

வெப்ப அலை பாதிப்புகள் தொடர்பான தரவுகளையும், விவரங்களையும் சேகரித்து, அதன் அடிப்படையில் சுகாதார குழுவினர் செயல்பட வேண்டும். மருந்துகள், தடுப்பூசிகளை சேமிப்பதற்கான குளிர்பதன வசதிகள் ஏற்படுத்த வேண்டும்.

அனைத்து மருத்துவமனைகள், சுகாதார நிலையங்களிலும் ஓஆர்எஸ் எனப்படும் உப்பு, சர்க்கரை கரைசல் விநியோக வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் ஜனவரி மாத பரிசோதனையில் 43 மருந்துகள் தரமற்றவை



**சென்னை, மார்ச்.19:** தமிழகத்தில் கடந்த ஜனவரி மாதம் பரிசோதனை செய்யப்பட்ட மருந்துகளில் 43 மருந்துகள் தரமற்றவையாக இருப்பது தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் தரத்தை உறுதி செய்வதற்காக, மத்திய, மாநில அரசுகள் ஆய்வு செய்கின்றன.

மருந்தகங்கள், சில்லறை விற்பனையகங்கள், மொத்த விற்பனைக் கூடங்கள், கிடங்குகள், உற்பத்தி அலகுகளில் இருந்தும் சில மருந்துகள் எடுத்து பரிசோதனை செய்யப்படுகின்றன.

அதன்படி, கடந்த ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நாடு முழுவதும் 215 மருந்துகள் தரமற்றவையாக இருந்தது கண்டறியப்பட்டது. அதில் தமிழகத்திலிருந்து மட்டும் 43 மருந்துகள் இடம்பெற்றிருந்தன. அதில் சென்னை ஆய்வகத்தில் 22 மருந்துகள், மதுரை ஆய்வகத்தில் 21 மருந்துகள் பரிசோதனை செய்யப்பட்டன.

அதேபோல், கர்நாடகத்தில் 21 சதவீதமும், ராஜஸ்தானில் 17 சதவீதமும் தரமற்ற மருந்துகள் இருந்தன.

தெலங்கானா, கேரளம், ஒடிசா, ஜம்மு-காஷ்மீர், இமாசலப்பிரதேசம் மாநிலத்திலும் தரக்குறைபாடுள்ள மருந்துகள் இருப்பது தெரியவந்தது.

இது தொடர்பாக மருந்து கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "ஒரு குறிப்பிட்ட உற்பத்தி தொகுப்பு (பேட்ச்) மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வியடைவது, அந்தத் தொகுப்புக்கு மட்டுமே பொருந்தும். சந்தையில் உள்ள மற்ற மருந்துகள் குறித்து கவலைப்படத் தேவையில்லை" என்று தெரிவித்தனர்.

# 751 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்க வேண்டும்: அரசு மருத்துவர்கள் வேண்டுகோள்



**சென்னை, மார்ச்.19:** 'மார்ச் இறுதிக்குள் பணியில் இணைந்தால் மட்டுமே 2 ஆண்டுகள் முடிவில் நீட் தேர்வில் பங்கேற்க முடியும் என்பதால், தேர்தல் ஆணையத்தின் சிறப்பு அனுமதி பெற்று 751 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்க வேண்டும்' என்று அரசு மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசு மருத்துவமனைகளுக்கு 1,100 உதவி மருத்துவர்களை தேர்ந்தெடுப்பதற்கு கடந்த ஜன.25-ம் தேதி நடந்த தேர்வில் தேர்ச்சி பெற்ற 20 ஆயிரம் பேரில் சுமார் 2 ஆயிரம் பேரின் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, 1,071 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் 100 பேருக்கு பணி நியமன ஆணைகளை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடந்த 13-ம் தேதி வழங்கினார். அடுத்த நாள் 220 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. காலிப் பணியிடங்கள் இல்லாததால் மீதமுள்ள 751 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை.

இதுதொடர்பாக தமிழ்நாடு மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் மு.அகிலன் கூறியதாவது: சுகாதாரத்துறையில் மருத்துவர் காலிப்பணியிடங்கள் இல்லாததால், 3 மாதம் கழித்து தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அரசு இட ஒதுக்கீட்டில் மருத்துவ மேற்படிப்புக்கான நீட் தேர்வு எழுத 2 ஆண்டுகள் பணிபுரிய வேண்டும்.

மார்ச் 31-ம் தேதிக்கு முன்பு பணியில் இணைந்தால் மட்டுமே, காலவிரயமின்றி 2 ஆண்டுகள் முடிவில் நீட் தேர்வில் கலந்து கொள்ள முடியும்,எனவே, தேர்வு செய்யப்பட்டு காத்திருக்கும் மருத்துவர்களின் எதிர்காலம் கருதி, அரசு சேவை சாரா மருத்துவர்களை பிணைக்காலப் பணியில் இருந்து விடுவித்து, அந்த பணியிடங்களில் அரசு பணிக்காக காத்திருக்கும் மருத்துவர்களுக்கு, தேர்தல் ஆணையத்திடம் சிறப்பு அனுமதி பெற்று பணி நியமன ஆணைகளை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வாக்காளர் அடையாள அட்டை இல்லையா? - வாக்களிக்க 12 மாற்று ஆவணங்களை பட்டியலிட்டது தேர்தல் ஆணையம்



**சென்னை, மார்ச்.19:** வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் பட்டியலிட்டுள்ள மாற்று புகைப்படத்துடன் கூடிய 12 ஆவணங்கள் காண்பித்து வாக்களிக்கலாம் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: நடைபெறவிருக்கின்ற, 2026-ம் ஆண்டிற்கான சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது.

அதன்படி, * ஆதார் அட்டை, * மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, * புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், * தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஓட்டுநர் உரிமம், * வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card), * தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை, * இந்திய கடவுச் சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், * மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், * நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் * இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவு நாளுக்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச் சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருந்தால் மட்டுமே...

அதேவேளையில், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவுபடுத்தப்படுகிறது.

1950ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20 A-ன் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச் சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச் சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச் சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

# 46,000 மெட்ரிக் டன் எல்பிஜி நிரப்பிய 2 கப்பல்கள் விரைவில் தமிழகம் வருகின்றன

**அகமதாபாத், மார்ச்.19:** சுமார் 46,000 மெட்ரிக் டன் எல்பிஜி காஸ் நிரப்பிய இந்திய டேங்கர் கப்பல் நந்தா தேவி நேற்று குஜராத் வந்தடைந்தது. அதில் உள்ள எல்பிஜி காஸ் 2 தனி கப்பல்களுக்கு மாற்றப்பட்டு தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.




கடந்த பிப்ரவரி 28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தொடங்கிய கூட்டுத் தாக்குதல் போராக மாறியது. இதில் உலக நாடுகளுக்கு சரக்குக் கப்பல் செல்லக் கூடிய ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியது. மீறிச் செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் உள்ளது.

இந்த சூழலில் மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியால் இந்தியக் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து செல்ல ஈரான் சிறப்பு அனுமதி கொடுத்தது.

இதையடுத்து 40,000 மெட்ரிக் டன் எல்பிஜி காஸ் நிரப்பிய ஷிவாலிக் என்ற டேங்கர் கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியை பத்திரமாக கடந்து நேற்று முன்தினம் குஜராத்தின் முந்த்ரா துறைமுகம் வந்து சேர்ந்தது.

இந்நிலையில் சுமார் 46,000 மெட்ரிக் டன் எல்பிஜி காஸ் நிரப்பிய நந்தா தேவி என்ற மற்றொரு டேங்கர் கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து நேற்று அதிகாலையில் குஜராத் வந்து சேர்ந்தது. நந்தா தேவி டேங்கர் கப்பல் குஜராத்தின் கண்ட்லா துறைமுகத்தில் நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கு பதிலாக இக்கப்பல் வடினார் அருகில் நடுக்கடலில் நிறுத்தப்பட்டது.

அதில் உள்ள எல்பிஜி காஸ், எம்டி பிடபிள்யூ பிரீஸ் மற்றும் எம்டி ஜக் பிரதாப் ஆகிய 2 தனி கப்பல்களுக்கு மாற்றப்படும். அதன் பிறகு இரு கப்பல்களும் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் என அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

நாடு முழுவதும் சமையல் காஸ் தட்டுப்பாடு நிலவும் சூழலில் 2 நாட்களில் 2 எல்பிஜி கப்பல்கள் இந்தியா வந்திருப்பது மிகப்பெரிய நிவாரணமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது வளைகுடாவில், மொத்தம் 611 மாலுமிகளுடன் இந்தியக் கொடியேற்றப்பட்ட 22 கப்பல்கள் உள்ளன.

ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து சுமார் 81,000 டன் கச்சா எண்ணெயுடன் இந்தியக் கொடியேற்றப்பட்ட 'ஜக் லட்கி' எண்ணெய்க் கப்பலும் பாதுகாப்பாக இந்தியாவை நோக்கிப் பயணித்து வருவதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

# டெல்டா மாவட்டங்களில் இன்று, நாளை மழை பெய்ய வாய்ப்பு




**சென்னை, மார்ச்.19:** சென்னை வானிலை ஆய்வு மைய உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர். துரை நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக, மார்ச் 19, 20 ஆகிய தேதிகளில் டெல்டா மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மழை பெய்யக்கூடும். மார்ச் 21, 22 தேதிகளில் மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்யக்கூடும்.

மார்ச் 23-ல் தென்தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

# சென்னை மாநகரப் பேருந்து: பட்டன் போன் வைத்திருந்தால் மாதப் பயண அட்டை!



**சென்னை, மார்ச்.19:** சென்னை மாநகரப் பேருந்து மாதாந்திரப் பயண அட்டை வழங்கும் மையங்களில் ஆண்ட்ராய்டு அல்லாத பட்டன் போன் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே பயண அட்டை வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரப் பேருந்துகளில் நாள்தோறும் லட்சக்கணக்கான மக்கள் பயணித்து வருகிறார்கள். நாள்தோறும் பயணிப்பவர்களுக்கு பயனளிக்கும் வகையில் மாதாந்திரச் சலுகை பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றன.

குளிர்சாதன வசதி பேருந்து தவிர மற்ற அனைத்து மாநகரப் பேருந்துகளிலும் விருப்பம்போல் பயணிக்க மாதம் ரூ. 1,000-ம், குளிர்சாதன வசதி பேருந்து உள்பட அனைத்து பேருந்துகளிலும் பயணிக்க மாதம் ரூ. 2,000-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.

இந்த மாதாந்திரப் பயண அட்டைகள் மூலம் 70,000-க்கும் மேற்பட்ட பயணிகள் பயனடைந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், பணமில்லா பரிவாத்தனையை ஊக்குவிக்கும் வகையில், சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையம் சார்பில் 'சென்னை ஒன்' செயலி அறிமுகம் செய்யப்பட்டது. தற்போது 10 லட்சம் பேர் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகிறார்கள்.

சென்னை மாநகரப் பேருந்து, சென்னை மெட்ரோ ரயில், புறநகர் ரயில் உள்ளிட்டவற்றில் பயணம் செய்வதற்கு சென்னை ஒன் செயலி மூலம் டிக்கெட் பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து, சென்னை ஒன் செயலி மூலமே மாநகரப் பேருந்துகளின் ரூ. 1,000, ரூ. 2,000 மாதப் பயண அட்டைகளும், புறநகர் ரயில்களின் மாதப் பயண அட்டைகளும் பெற்றுக் கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், சென்னை மாநகரப் பேருந்து நிலையங்களில் இயங்கும் மாதப் பயண அட்டை வழங்கும் மையங்களில் இந்த மாதம் முதல் சென்னை ஒன் செயலி மூலம் பயண அட்டைகளை புதுப்பித்துக் கொள்ள பயணிகளிடம் அலுவலர்கள் அறிவுறுத்தி வருகிறார்கள்.

மேலும், பட்டன் போன் வைத்திருப்பவர்கள், ஆண்ட்ராய்டு செல்போன் முறையாக உபயோகிக்கத் தெரியாத வயதானவர்களுக்கு மட்டும் மையங்களில் பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

# திருப்பரங்குன்றம் தீபம் தொடர்பான அவமதிப்பு வழக்கில் தனி நீதிபதி உத்தரவுக்கு இடைக்கால தடை

**மதுரை, மார்ச்.19:** திருப்பரங்குன்றம் கார்த்திகை தீப வழக்கு தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுகளுக்கு ஏப்.8-ம் தேதிவரை இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டுள்ளது.

திருப்பரங்குன்றம் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்தும், நீதி மன்ற அவமதிப்பு மனுக்களில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராகவும் அரசுத் தரப்பில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஒவ்வோர் ஆண்டும் கார்த்திகை தீப நாளில் தீபத்தூணில் கோயில் நிர்வாகம் தீபம் ஏற்ற வேண்டும் என ஜன.6-ம் தேதி உத்தரவிட்டது. நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு எதிரான மேல்முறையீடு மனுக்கள் நிலுவையில் இருந்தன. இதனால் நீதிமன்ற அவமதிப்பு மனுக்களை தனி நீதிபதி தொடர்ந்து விசாரணை நடத்தி பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்து வந்தார். இந்த மனு கடந்த மார்ச் 4-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, உயர் நீதிமன்றம் நியமிக்கும் 5 பேர் கொண்ட குழு மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் வழிபாடு நடத்த அனுமதிப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் பதிலளிக்க வேண்டும்.

மேலும் இதுதொடர்பாக மார்ச் 18-ம் தேதி மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன், துணை ஆணையர் இனிகோ திவ்யன் ஆகியோர் தகுந்த பதில் அளிக்க வேண்டும். தவறினால் அவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்படும் என உத்தரவிட்டு அடுத்தகட்ட விசாரணையை தள்ளிவைத்திருந்தார்.

இந்த வழக்கு தனி நீதிபதி முன்பு இன்று (மார்ச் 18) விசாரணைக்கு வரவுள்ள நிலையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தன.

அப்போது அரசுத் தரப்பில், நீதிமன்றம் பரிந்துரைக்கும் 5 பேரை தீபத்தூண் அருகே பூஜை செய்ய அனுமதிப்பது தொடர்பாக தெரிவிக்கக் கூறப்பட்டுள்ளது. இந்த அவமதிப்பு வழக்கில் புதிய நபர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிரானது. இதற்கு எதிராகவும் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதையும் விசாரிக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

அப்போது நீதிபதிகள், அதை அனுமதிப்பதில் என்ன சிக்கல் இருக்கப் போகிறது, 5 நபர்களை பூஜை செய்ய அனுப்புவது பிரச்சினையாக இருந்தால் கோயில் சார்பில் பூஜை செய்யலாமே, இது சிறிய விஷயம்தானே. இதை செய்து மற்ற பிரச்சினைகளை தவிர்க்கலாமே என்றனர்.

அதற்கு அரசு தரப்பில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 2 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதிகாரத்தை மீறி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் உத்தரவுவிவரங்களை அரசுத் தரப்பில் தாக்கல் செய்ய வேண்டும். அதுவரை நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுகளுக்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. விசாரணை ஏப்.8-க்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

# தேர்தலில் திமுக பக்கம் நிற்பது ஏன்? - தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைகோ தகவல்

முன்னாள் முதல்வர் கருணாநிதி உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த போது அவரிடம் ஒரு வாக்குக் கொடுத்தேன். அதை மீறக்கூடாது என்பதால் திமுக பக்கம் நிற்கிறோம். தொகுதிகள் குறைக்கப்பட்டதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டோம்" என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

சென்னை எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தலுக்கான மதிமுக தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ நேற்று வெளியிட்டார். அதில், மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி, ஆளுநர் பதவி என்பது அகற்றப்பட வேண்டும்.

கல்விக்கடன்களை ரத்து செய்ய வேண்டும். பூரண மதுவிலக்கை அமல்படுத்த தொடர்ந்து அரசிடம் வலியுறுத்துவோம் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் இடம் பெற்றிருந்தன.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வைகோ கூறியதாவது: பாலியல் குற்றங்கள் அனைத்துக் காலங்களிலும் நடந்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் அவை குறைந்துள்ளது. பாலியல் வன்கொடுமை நடப்பதற்கு காரணமே போதைப்பொருள் கலாசாரம் தான். அதை அரசு கட்டுப்படுத்த வேண்டும். இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளை வெளியே வர முடியாத அளவுக்கு தண்டிக்க ஏதுவாக சட்டம் கொண்டுவர வேண்டும்.

எங்கள் தொண்டர்கள் தலைமையின் முடிவை ஏற்றுக்கொள்வார்கள். மற்ற கட்சிகள் கூடுதல் தொகுதிகள் கேட்கலாம். அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. மதிமுக செறிவூட்டப்பட்ட திராவிட இயக்கம். மதவாத சக்திகள் தமிழகத்தில் காலூன்றுவதை தடுப்பதே எங்கள் இலக்கு.

விஜய் குறித்து பல கருத்துக்கணிப்புகள் வருகிறது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் போது அவரின் நிலை என்ன என்பது தெரியும். பல கணிப்புகளை தேர்தல் முடிவுகள் தவிடுபொடியாக்கியுள்ளன. விஜய் செல்லும் இடங்களில் அவருக்கு நல்ல கூட்டம் கூடுகிறது. ஆனால், அவர் எப்படிப் பேசுகிறார், என்ன பேசுகிறார், எப்படிச் செயல்படுகிறார் என்று நான் விமர்சிக்க விரும்பவில்லை.

ரஜினிகாந்தை திமுக மிரட்டியது என்ற செய்தி உண்மைக்குப் புறம்பானது. ரஜினிகாந்த் மிகவும் தைரியமான நேர்மையான நபர். யார் மிரட்டலுக்கும் அஞ்சக்கூடியவர் அவர் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.




# தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு: நயினார் நாகேந்திரன் தகவல்

**திருநெல்வேலி, மார்ச்.19:** தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியில் விரைவில் தொகுதிப் பங்கீடு நடைபெறும் என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தனித்துப் போட்டியிடுவது அல்லது கூட்டணி வைப்பது என்பது அவர்களின் உரிமை. இதைப் பற்றி நான் ஏற்கனவே பலமுறை தெளிவுபடுத்திவிட்டேன். திமுக எப்படி கூட்டணி அமைத்து போட்டியிடுகிறதோ அதேபோல அவர்களும் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இதில் நான் கருத்துச் சொல்ல ஏதுமில்லை.

எவ்வளவு பெரிய பணபலம் இருந்தாலும், இந்தியாவை டாட்டாவோ பிர்லாவோ ஆள முடியாது. திமுகவிடம் 50,000 முதல் 60,000 கோடி ரூபாய் பணம் இருக்கலாம், ஆனால் மக்கள் மனம் யாரிடம் இருக்கிறது என்பதுதான் முக்கியம்.

5 ஆண்டுகளுக்கு முன் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. சொத்து வரி உயர்த்தப்படாது என்று கூறிவிட்டு 300 மடங்கு உயர்த்தியுள்ளனர். மின்கட்டணத்தை உயர்த்த மாட்டோம் என கூறிவிட்டு உயர்த்திவிட்டனர். மாதந்தோறும் மின் கணக்கெடுப்பு முறை இன்னமும் அமல்படுத்தப்படவில்லை.

தமிழகத்திற்கு சாலைகள் மற்றும் பாலங்கள் அமைப்பதற்காக மத்திய அரசு இதுவரை 14 லட்சம் கோடி ரூபாய் வழங்கியுள்ளது. ஆனால்,எதையுமே தரவில்லை என தமிழக அரசு பொய் கூறுகிறது. ரேஷன் கடைகளில் மத்திய அரசு இலவசமாக வழங்கும் பொருட்களுக்கு, மாநில அரசு தனது ஸ்டிக்கரை ஒட்டித் தங்களது திட்டம் போலக் காட்டி வருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளது.

தேர்தல் வேட்புமனுத் தாக்கலுக்கு இன்னும் 12 நாட்கள் அவகாசம் உள்ளது. பாஜகவின் தேர்தல் பொறுப்பாளர் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் சென்னை வரவுள்ளார். அவர் வந்தவுடன் தொகுதி பங்கீடு குறித்துப் பேசி இறுதி செய்யப்படும். அதிமுக உள்ளிட்ட கட்சிகளுடன் இணைந்து நாங்கள் ஒற்றுமையாகச் செயல்படுவோம் என்றார்.

தொகுதி மாறுவது குறித்த விமர்சனங்களுக்கு, வேட்புமனு தாக்கல் செய்த பின்பு இதற்கு பதில் சொல்கிறேன் என்று கூறினார்.

சர்வதேச அளவில் நிலவும் போர்ச் சூழலால் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது திட்டமிட்டு நடத்தப்பட்டது அல்ல. இன்னும் 10 முதல் 15 நாட்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

# சர்ச்சை கருத்துக்கு வருத்தம் தெரிவித்தார் சி.வி.சண்முகம்

**விழுப்புரம், மார்ச்.19:** தமிழக அரசு கொண்டுவந்த 'உங்கள் கனவை சொல்லுங்கள்' திட்டத்தை விமர்சித்து சி.வி.சண்முகம் பேசிய கருத்துகள் சர்ச்சையாகின. இதற்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்த நிலையில் அவர் நேற்று வருத்தம் தெரிவித்தார்.

தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை அதிகரித்துள்ளதாகக் கூறி தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் விழுப்புரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் பேசும்போது, 'திராவிட மாடல் அரசு' என்ற பெயரில், தமிழகத்தில் திமுக கொள்ளையடித்துள்ளது.

ஆட்சி முடிந்து போகும்போது உங்கள் கனவை சொல்லுங்கள் என முதல்வர் ஸ்டாலின் கேட்கிறார். 'எனக்கு நயன்தாரா வேண்டும், எனது கனவை நிறைவேற்றுவாரா..' 'நயன்தாராவை எனக்கு திருமணம் செய்து வையுங்கள்' என ஒருவர் கேட்பார், நிறைவேற்றுவாரா. இவ்வாறு அவர் பேசினார்.

இவரது இந்த சர்ச்சைக் கருத்துக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியது. இதன்படி, திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி., தமிழக காங்கிரஸ் தலைவர்செல்வப்பெருந்தகை, பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு, மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் பாலபாரதி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தென்னிந்திய நடிகர் சங்கத்தின் தலைவர் நாசர் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக சி.வி.சண்முகத்தை கண்டித்து விழுப்புரத்தில் மகளிர் அமைப்பினர் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு உருவ பொம்மையை எரித்தனர். அவர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து, தேர்தலில் போட்டியிட தடை விதிக்க வேண்டும் என்றனர்.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு சி.வி.சண்முகம் அளித்த தகவலில், "தவறுதலாக நயன்தாராவின் பெயர் உச்சரிக்கப்பட்டது. எந்த விதமான உள் நோக்கத்துடன் அவரது பெயரை நான் குறிப்பிடவில்லை. இதற்காக வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன்" எனக் கூறியுள்ளார்.

# சிபிஐ விசாரணையில் நடந்தது என்ன? செந்தில் பாலாஜி விளக்கம்!

கரூரில் நடைபெற்ற சில நிகழ்வுகள் குறித்து சிபிஐ கேள்வி எழுப்பியதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி புதன்கிழமை தெரிவித்தார்.

கரூரில் தவெக தலைவர் விஜய்யின் பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் தில்லியில் சிபிஐ அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை 6 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இந்த நிலையில், சென்னை திரும்பிய செந்தில் பாலாஜி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசியதாவது:

"கரூரில் நடைபெற்ற துயரச் சம்பவம் குறித்து முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்துள்ளேன். சாட்சிகள் என்ற அடிப்படையில் அன்று நடைபெற்ற குறிப்பிட்ட சில நிகழ்வுகள் குறித்து என்னிடம் கேள்வி எழுப்பினார்கள். என்ன கேள்விகள் என்பதை பொதுவெளியில் கூறுவது சரியாக இருக்காது. உரிய பதிலை விசாரணை ஆணையத்தில் அளித்துள்ளேன். களத்தில் நின்று பணியாற்றியதால், சிபிஐ சந்தேகங்களுக்கு பதிலளிப்பது பொறுப்பாக எடுத்துக் கொண்டு முறையான பதில் அளித்துள்ளேன்.

நாடாளுமன்ற தேர்தல் முடிந்தவுடனே சட்டப்பேரவைத் தேர்தல் பணிகளை திமுக முன்னெடுத்து செய்து வருகின்றது. தொடர்ச்சியாக மாநாடு நடத்தி வருகிறோம். ரஜினி குறித்து ஆதவ் அர்ஜுனாவின் கருத்துகளைப் பற்றி நாங்கள் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக மு.க. ஸ்டாலின் முதல்வராகும் சூழல் இருக்கிறது. மக்கள் வாக்களிக்க தயாராக இருக்கிறார்கள்" எனத் தெரிவித்தார்.

கரூர் சம்பவம் நடந்த அடுத்த சில நிமிஷங்களில் செந்தில் பாலாஜி தனது ஆதரவாளர்களுடன் நிகழ்விடத்துக்கு வந்தது குறித்தும், பிறகு தவெக நிர்வாகிகள் செய்த ஏற்பாடுகள் தொடர்பாக செந்தில் பாலாஜி பொதுவெளியில் சுமத்திய குற்றச்சாட்டுகள் குறித்தும் அவர் மீது தவெக நிர்வாகிகள் முன்வைத்த குற்றச்சாட்டுகள் தொடர்பாகவும் செந்தில்பாலாஜியிடம் அதிகாரிகள் கேள்களை கேட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM